REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 5 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 235 | Wednesday 05, October, 2022 | 16 பக்கங்கள் | 40/-

UNHRC நிறைவு பகுதியில் பங்கேற்க

## அமைச்சர் அலி சப்ரி ஜெனீவா பயணம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரின் நிறைவுப் பகுதியில் பங்கேற்பதற்காக, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜெனிவாவிற்கு பயணமாகியுள்ளார். எதிர்வரும் 07ஆம் திகதி கூட்டத்தொடர் நிறைவுபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## 2023ஆம் வருட மொத்த மீண்டு வரும் செலவினம் 4,634 பில். ரூபா

மொத்த மூலதனச்செலவு 3,245 பில். ரூபா

அரசு மதிப்பீடு செய்துள்ளதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு



2023 ஆம் ஆண்டுக்கான மொத்த மீண்டுவரும் செலவினம் 4,634 பில்லியன் ரூபா என்றும் மொத்த மூலதனச் செலவு 3,245 பில்லியன் ரூபா என்றும் அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் 06

## IMF ஒப்பந்த விபரங்கள் யாவும் உரிய நேரத்தில் வெளியிடப்படும்

விமல் MPயின் கேள்விக்கு பிரதமர் சபையில் பதில்



சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பின்னர், உடன்படிக்கை தொடர்பான விபரங்கள் உரிய குழுக்களுக்கு வழங்கப்படுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட ஒப்பந்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இன்று பாராளுமன்றத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலின் பின்னர் 06

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக ரூ. 15,000

முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவிப்பு - CWC பாரத்

ஹட்டன் சுழற்சி நிருபர்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாய் வழங்க முதலாளிமார் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (04) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில், அத்தியாவசியப் 06

பாடசாலை மாணவருக்கான மதிய உணவுத்திட்டத்தில்

# மேலும் ஒரு மில். மாணவருக்கு மதிய உணவுத் திட்டம் அமுல்



ஜனாதிபதி ரணிலின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

ஆண்டுதோறும் மதிய உணவை வழங்க 400 கோடி ரூபாவை கூடுதலாக ஒதுக்கவும் அரசாங்கம் முடிவு

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு மில்லியன் மாணவர்களுக்கு வழங்கும் விதத்தில் இத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த வகையில் 7,926 பாடசாலைகளைச் 06

## மலேசியா உயர்ஸ்தானிகருடன் இ.தொ.கா குழுவினர் சந்திப்பு

இலங்கை மலேசிய உறவு குறித்து விரிவாக பேச்சு



மலேசியா உயர்ஸ்தானிகர் டடோ டான் யாங் தாய் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின் போது இலங்கை மற்றும் 06

## கோப் குழுவிற்கு சரித்த ஹேரத்தின் பெயர் பரிந்துரை

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் தெரிவிப்பு 03



## தோட்ட தொழிலாளருக்கு தீபாவளி முற்பணம் வழங்கல்

இலங்கை தேயிலை சபையுடன் பேச்சுவார்த்தை



பண்டிகையை முன்னிட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் முற்பணம் தொடர்பில் இலங்கை தேயிலை சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருப்பதாக பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன நேற்று (04) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கடனடிப்படையில் தேவையான வசதிகளை வழங்குவதற்கு தேயிலை சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். 06

## எரிபொருள் விலை அடுத்த இரு வாரங்களில் மேலும் குறையும்



வாய்ப்பு உள்ளதாக அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவதற்கேற்ப அடுத்த இரண்டு வாரங்களில் எரிபொருள் விலை மேலும் குறைக்கப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர நேற்று தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற 06

கோப் குழுவில் ஏன் நியமனம் இல்லை?

## சுயாதீனமாக செயற்படும் MPக்கள் சபையில் சர்ச்சை

சபாநாயகர் வழங்கிய பதிலால் அமைதி



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அறிவார்ந்த பலர் கோப் குழுவுக்கு நியமிக்கப்படவில்லை என்றும் அது தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேக்கர சபையில் தெரிவித்தார். 06

மின்சாரம், எரிபொருள், மருத்துவம் உட்பட

## மேலும் சில சேவைகள் அத்தியாவசியமாகின

ஜனாதிபதியால் விசேட வர்த்தமானி



மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் மற்றும் அதுசார்ந்த அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 06

அரச நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியரின்

## ஓய்வூதிய வயதெல்லையை திருத்த அமைச்சரவை அனுமதி

ஜனாதிபதியின் யோசனைக்கு அங்கீகாரம்



அரச நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக மாற்றியமைத்து 2023 ஜனவரி 01ஆம் திகதி முதல் இது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிடுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரசுக்கு சொந்தமான 06

## கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக செயற்பட வேண்டாம்

அரசிடம் சாணக்கியன் MP கோரிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் யுவதிகளை அடக்குவதற்கு அரசாங்கம் அவர்களை பின்தொடர்கிறது. கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அரசாங்கம் 06

உலக சந்தையில் படிப்படியாக அதிகரிப்பு;

## தங்கத்தின் விலையில் நேற்று திடீர் மாற்றம்



உலக சந்தையில் தங்கத்தின் விலை படிப்படியாக அதிகரித்து வருவதாக உலக சந்தை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினத்தின் நிலவரப்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் உலக விலை 1,700 டொலர் என்ற அளவை எட்டியுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை கொழும்பு செட்டியார் வீதி தங்கச் சந்தையிலும் உலக சந்தைக்கு 06

## 13,200 லீற்றர் டீசலுடன் பௌஸர் ஒன்று விபத்து

ஹந்தபானாகல பிரதேசத்தில் சம்பவம் 03



## தொலைபேசி, துணை சாதனங்களின் விலைகளும் உயர்வு!



03



## அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட மாட்டாது

சபையில் நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி 03

## உள்நாட்டு பால்மா விலைகள் அதிகரிப்பு

உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானம்



உள்ளூர் பால் மாவின் விலையை அதிகரிப்பதற்கு பால் மா உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

450 கிராம் உள்ளூர் பால் மா பக்கெற் ஒன்றின் 06

தொழிலதிபராகவும் பேராசிரியராகவும் நடித்து

## பெண்களிடம் கோடிக்கணக்கில் மோசடி செய்த நபர் கைது

பாணந்துறையில் CIDயினர் அதிரடி



பத்திரிகைகளில் திருமண விளம்பரங்களை வெளியிட்டு பெண்களை ஏமாற்றி பல கோடி ரூபாவை மோசடி செய்தாரென சந்தேகிக்கப்படும் ஒருவரை ஹோமாகம விசேட குற்றப் புலனாய்வுப் 06

## சீமெந்து விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

50Kg மூடை ரூபா 100ஆல் குறைப்பு




50 கிலோ எடையுள்ள சீமெந்து மூடையின் விலையை 100 ரூபாவால் குறைக்க INSEE Corporation மற்றும் INSEE Plus ஆகிய நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இந்த விலை 06

## இறால் தொட்டியில் மிதந்து வந்த சடலம்

யாழ். திருவடிநிலையில் சம்பவம்



யாழ்ப்பாணம் – மாதகல் திருவடிநிலை கடலிலிருந்து ஆண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருவடிநிலை கரையோரமாக 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்









லேக்ஹவுஸ் இந்து மன்றம் நடாத்தும் தினகரன் நவராத்திரி விழா நேற்று தினகரன் ஆசிரியர் பீடத்தில் நடைபெற்றது. விழா தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட, ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, நிர்வாகப் பணிப்பாளர் பிரபாத் மஞ்சுள மாகந்துர, நிதிப் பணிப்பாளர் ஹரேந்திர காரியவசம், நீதி பணிப்பாளர் ஜனக்க ரணதுங்க, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல மற்றும் சிலுமின, ஒப்சேர்வர் பத்திரிகைகளின்ஆசிரியர்கள் ஆகியோருடன் மன்ற உறுப்பினர்கள், லேக்ஹவுஸ் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# தினகரன் வாணி விழா

























தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 5 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්


தொழுகை நேரம்
10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இலங்கை, ஐஸ்லாந்துக்கிடையே நட்புறவுகள் மேலும் வலுவடையும்

## ஐஸ்லாந்து ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதியிடம் உறுதி

இலங்கை, ஐஸ்லாந்து நாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் வலுவடையுமென ஐஸ்லாந்து ஜனாதிபதி Guoni Th. Johannesson ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் சமூக ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் இலங்கை மக்கள் பொருளாதார சவால்களை மிகவும் வெற்றிகரமாக கையாள்வார்களெனவும் ஐஸ்லாந்து ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை – ஐஸ்லாந்து நாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் பலப்படுத்தப்படுமென்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் ஐஸ்லாந்து ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலுள்ள நட்புறவை தற்போது மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த உறவு எதிர்காலத்தில் இலங்கைக்கும் ஐஸ்லாந்துக்கும் மேலும் பல நன்மைகளை தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பாதித்துள்ள உயர் பணவீக்கம் பற்றி தனது கருத்தை வெளியிட்ட அவர், ஐஸ்லாந்துக்கும் அது பற்றிய

06

# அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது

## சபையில் நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி



லோரன்ஸ் செல்வநாயகம்

அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பது தொடர்பில் எத்தகைய தீர்மானத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் இது தொடர்பான தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்:

அரச ஊழியர்களுக்கு இந்த மாதம் ஒரு பகுதி சம்பளமே வழங்கப்படும் என சமூக வலைத்தளங்களில்

06

# கெசல்வத்தை தினுகவின் சகா ஹெரோயினுடன் டாம் வீதியில் கைது

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான, கெசல்வத்தை தினுகவின் உதவியாளர் ஒருவர் ஹெரோயினுடன் (3) மாலை கைது செய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடம் தாதியர் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவும் காணப்பட்டுள்ளன.

சந்தேக நபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உள்ளடக்கத்தை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்



சீனாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என ஜே.வி.பி எம்பி விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சீனாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் நாட்டின் பல்வேறு தொழில்துறைகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர்,

அந்த உடன்படிக்கையின் உள்ளடக்கத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி அமைச்சின் வரிச் சலுகைகள் மற்றும் சில வரிச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சில நிறுவனங்களுக்கு வரிச் சலுகை வழங்கியுள்ள அரசாங்கம் முதியோர் தினத்தன்று வங்கிகளில் முதியோர்களின் வைப்புக்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட 15 வீத வட்டியை முழுமையாக இல்லாமல் செய்துள்ளது.

முதியோர் தினத்தில் அவர்களுக்கு வழங்கிய பரிசைப் போன்றே இது உள்ளது. அவர்கள் தமக்குத் தேவையான மருந்துகளை வாங்குவதற்குக்கூட முடியாத நிலையில் வாழ்கின்றனர்.

கம்பனிகளுக்கு வரிச்சலுகைகளை வழங்கி தங்களின் சொந்தப் பணத்தை வங்கிகளில் வைத்திருக்கும் முதியோருக்கு இவ்வாறான நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.


கடந்த காலங்களில் வங்கி வட்டி வீதத்தில் மாற்றங்களை மேற்கொண்டமையினால் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சிறிய மற்றும் மத்திய தொழில்துறையினருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது மிகவும் அநீதியானது. அதேவேளை ஊழல் மோசடிகளை

06

# கோப், கோபா குழு உறுப்பினர் நியமனம் விடயத்தில் எனது தலையீடு கிடையாது

## சர்ச்சைக்கு சபாநாயகர் முற்றுப்புள்ளி

லோரன்ஸ் செல்வநாயகம்



கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான தீர்மானம் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டது. தாம் அதில் தலையிடவில்லையென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. சுயாதீன தரப்பினருக்கு சபையில் உரையாற்றுவதற்கான உரிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் நான் தலையிட்டேன்.

எனினும் கோப் மற்றும் கோபா குழு உறுப்பினர் நியமனம் தொடர்பான தீர்மானம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டதேயன்றி நான் அதில் தலையிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரச பொது நிறுவனங்கள் பற்றிய குழுவுக்கான (கோப்) உறுப்பினர்கள் நியமனம் தொடர்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சிகளிடையில் நேற்று சபையில் கடுமையான தர்க்கம் ஏற்பட்டதுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அதே வேளை எதிர்க்கட்சிகள் தமக்குள்ளே முரண்பட்டுக்கொண்டதுடன் அரச தரப்பிலிருந்து வெளியேறி சுயாதீன எதிர்க்கட்சியாக செயற்படும் எம்.பி.க்கள் கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு நியமிக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டுகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன.

ஏழு மூளை கொண்ட பூதம், மூன்று தலைக் கழுதைகள், படிக்காத முட்டாள் போன்ற வார்த்தைப் பிரயோகங்களினால் சபை சுமார் அரைமணிநேரம் அமளிதுமளியானது.

06

# கோப் குழுவிற்கு சரித்த ஹேரத்தின் பெயர் பரிந்துரை

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கோப் உறுப்பினராக முன்னாள் தலைவர் சரித்த ஹேரத்தை நியமிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷ டி சில்வா கோப் குழு உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக பாராளுமன்றத்தில் நேற்று அறிவிப்பு வெளியிட்டார்.

கோப் குழு உறுப்பினர் பதவியிலிருந்து ஹர்ஷ டி சில்வா தனது சொந்த விருப்பத்தின் பேரில் இராஜினாமா செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடத்துக்கு கோப் குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத்தை நியமிக்க எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் தெரிவித்தார்.

# கடற்றொழிலுக்கு தேவையான உபகரணங்கள் இறக்குமதிக்கு அனுமதி

## மானிய அடிப்படையில் வழங்கவும் நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் சில உபகரணங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கு இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்துள்ள போதும்

கடற்றொழிலுக்குத் தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சின் அனுமதியை பெற்றுக் கொண்டு தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் காவிந்த

06

# 13,200 லீற்றர் டீசலுடன் பௌஸர் விபத்து

## ஹந்தபானகல பிரதேசத்தில் சம்பவம்



வெல்லவாய பகுதியில் 13,200 லீற்றர் டீசலுடன் சென்று கொண்டிருந்த பவுசர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வெல்லவாய – தனமல்வில பிரதான வீதியின் ஹந்தபானாகல பிரதேசத்தில் டீசல் ஏற்றிச் சென்ற பவுசரே வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பவுசர் பலத்த சேதமடைந்தாலும் டீசல் வெளியேறவில்லையென தெரிவிக்கப்படுகிறது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கையடக்க தொலைபேசி, துணை சாதனங்களின் விலைகளும் உயர்வு



சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அனைத்து வகையான கையடக்க தொலைபேசிகள் மற்றும் துணை சாதனங்களின் விலைகள் மீண்டும் உயருமென அகில இலங்கை தொடர்பாடல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய வருடாந்த வருமானம் 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை பெறும் வர்த்தகர்களுக்கு சமூக பாதுகாப்பு வரி அறிவிடப்படுகிறது.

இதனையடுத்து பெரிய இறக்குமதியாளர்கள் பொருட்களை சில்லறை விற்பனையாளர்களுக்கு விற்கும் போது வரியைச் சேர்க்கின்றனர்.

இதனையடுத்து சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விற்கும்போது கூடுதல் வரிகளுடன் விலையை அதிகரிப்பதாக இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை 2.5 வீதம் என்று அறிவித்துள்ளது. எனினும் தயாரிப்பு வாடிக்கையாளரை சென்றடையும் போது, அது கிட்டத்தட்ட 05வீதமாக இருக்கும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், கையடக்க தொலைபேசிகள் மற்றும் துணைப் பொருட்களின் விலை மீண்டும் உயரும் என்பது உறுதியாகும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் தற்போது குழப்பமான நிலையில் உள்ளது. இந்தநிலையில் அரசாங்கத்தால் வரிகள் மற்றும் கட்டணங்களை அதிகரிக்க முடியும், ஆனால் தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதென்றும் இலங்கை தொடர்பாடல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு

# முழு நாட்டையும் முதலீட்டு வலயமாக உருவாக்குவது அவசியம்

## அமைச்சர் நசீர் அகமட் சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



முழு நாட்டையும் முதலீட்டு வலயமாக உருவாக்கி முதலீட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டியது நாட்டின் தற்போதைய தேவையாக உள்ளது என அமைச்சர் நஸீர் அகமட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு தந்திரோபாய முதலீட்டு நடவடிக்கைகள் அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதியமைச்சின் வரி சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது நாம் முதலீடுகளின் மூலம் குறைந்த வருமானத்தையே ஈட்டி வருகின்றோம்.

மலேசியா பங்களாதேஷ் போன்ற நாடுகள் கூட முதலீடுகளில் முன்னிலை வகிக்கின்றன. உலகளாவிய வலைப் பின்னலின் ஒரு பாகமாக மலேசியா மாறியுள்ளது. முதலீடுகளிலும் பொருளாதாரத்திலும் அது வெகுவாக முன்னேறியுள்ளது.

போட்டித் தன்மையுடனான முதலீடுகள் அவசியம். கவர்ச்சியான வரிச்சலுகைகளை வழங்குவதும் முதலீடுகளை ஊக்குவிக்க உறுதுணையாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாராளுமன்றமும் பல்கலையும் நடத்திய குறுகிய கால பாடநெறிகள் ஆரம்பம்

## முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவு

பாராளுமன்றம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக ஆரம்பித்த பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் குறுகியகால பாடநெறி யின் முதலாவது கட்டம் அண்மையில் பூர்த்தியடைந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பாடநெறியின் வளவாளர்களாக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மற்றும் பாராளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இதற்கமைய கடந்த 16ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் இப்பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றிருந்ததுடன், இதில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முதலாவது விரிவுரையை நடத்தினார்.

இதன் பின்னர் கடந்த 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் பாராளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி. கே ஜயதிலக மற்றும் சட்டவாக்கத் திணைக்களத்தின் பணிப்பாளரும், தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோர் விரிவுரைகளை நடத்தியிருந்தனர்.

ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற முறைமை பற்றிய கோட்பாட்டு அறிவின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் குறுகிய பாடநெறியானது பல்கலைக்கழக மாணவர்களுக்கு புதிய அனுபவத்துடன் கூடிய பெறுமதியான குறுகிய பாடநெறியாக அமைந்தது என பாடநெறி முடிவின் போது

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்

பலநாள் முற்றுகையிட்டாலும் பகைவரால் கைப்பற்ற முடியாதது ஆகி, உள்ளிருப்பார்க்கு வேண்டிய உணவையும் உடையதாய் உள்ளிருப்போர்போரிட வாய்ப்பாகவும் இருப்பதே அரண்.

# மண்சரிவு அச்சுறுத்தல் பிரதேசங்களில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்!

நாட்டில் சீரற்ற காலநிலையுடன் மழை பெய்யும் போது சில பிரதேசங்களில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதும் இன்னும் சில பிரதேசங்களில் நுளம்புகள் நோய்கள் தீவிரமடைவதும் அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டு வருகின்றன. அதிலும் தாழ்நிலங்களில் வெள்ளநிலை ஏற்படுவதும் மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படுவதும் கடந்த சில தசாப்தங்களாக வழக்கமாகி உள்ளது.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக மலையகப் பிரதேசங்களில் பெய்து வரும் மழை காரணமாக சில பிரதேசங்களில் சிறுசிறு மண்சரிவுகளும் பதிவாகியுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டுள்ள தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனமும் சீரற்ற காலநிலையுடன் மழை பெய்து வருவதால் மலையகப் பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படுவதற்கான அச்சுறுத்தல்கள் காணப்படுவதாக முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன.

அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பகுதிகளில் வாழும் மக்கள் முன்னவதானத்துடனும் விழிப்புடனும் செயற்பட வேண்டும் எனவும் அந்நிறுவனங்கள் மக்களைக் கேட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் ஹட்டன் பிரதேசத்தில் கடந்த 03 ஆம் திகதி பெய்த மழையின் காரணமாக பத்தனை, மவுண்ட்வேர்னன் மேற்பிரிவு தோட்டத்திலுள்ள தனிக்குடியிருப்பு ஒன்றுக்கு பின்புறமாக காணப்பட்ட பாரிய மண்மேடொன்று திடீரென காலை வேளையில் சரிந்து குறித்த குடியிருப்பின் கூரை மீது விழுந்துள்ளது.

இச்சமயம் அக்குடியிருப்பின் சமையலறையில் தம் மகளுடன் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ராமசாமி காளியம்மாள் என்ற 46 வயது மதிக்கத்தக்க பெண்மணியொருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் பிரதேசத்தில் பதற்றநிலையை ஏற்படுத்தியது.

இவ்வாறான அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில்தான் சீரற்ற காலநிலை நிலவும் போது விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இருப்பினும் இவ்விதமான கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்தாதவர்களும், என்னதான் அச்சுறுத்தல் என்றாலும் தம் பாரம்பரிய வாழிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு குடிபெயர விரும்பாதவர்களும் மக்கள் மத்தியில் இருக்கவே செய்கின்றனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

மனிதனின் தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளும் வேறு சில காரணங்களும் தான் மலையகப் பிரதேசங்களில் மண்சரிவுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இதனை தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மலையகப் பிரதேசங்களில் காணப்படும் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களை தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அடையாளப்படுத்தி அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு ஏற்கனவே அறிவித்தும் இருக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலகங்கள் ஊடாக பிரதேசவாசிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான சூழலில், பத்தனை பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் உயிரழப்பு ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தி, மண்சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

'மலையகத்தில் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் சுமார் 3000 வீடுகள் உள்ளன. அவ்வாறான இடங்களில் வசிக்கும் மக்களை அப்புறப்படுத்தி அவர்கள் வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான காணிகளை வழங்குமாறும் அவர் வலியுறுத்தி இருக்கின்றார்.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான கோரிக்கை. மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் இருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்ட அடிப்படையில் ஒழுங்கு முறையாக முன்னெடுக்கப்படுவது அவசியம். அது மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, 'இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் விரைந்து செயற்படும்' என உறுதியளித்துள்ளார்.

எனினும் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவதும் சீரற்ற காலநிலையுடன் மழை பெய்யும் போது மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்படுவதும் இன்றியமையாததாகும். அதன் ஊடாக துரதிர்ஷ்டகரமான அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் இந்து சமய எழுச்சிக்காக அரும்பணியாற்றிய உமா மகேஸ்வரன்



இலங்கையில் இந்துசமய கலாசார திணைக்களத்தில் பெரும்பணியாற்றியவர் அதன் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன். இன்று 5 ஆம் திகதி விஜயதசமியன்று தனது எட்டு வருட கால இந்து சமய அர்ப்பணிப்பான சேவையை நிறைவு செய்து வடமாகாண சபையின் உயர் பதவிக்காக செல்கிறார் அவர்.

2014 ஆம் ஆண்டு இந்து சமய கலாசார திணைக்களத்தில் பிரதிப்பணிப்பாளராக இணைந்து, 2015 ஆம் பணிப்பாளராக அவர் பதவி உயர்வு பெற்றார். கடந்த எட்டு வருட காலமாக திணைக்களத்தில் பாரிய மாற்றங்களை, புரட்சிகளை செய்து வந்தவர் உமா மகேஸ்வரன். இலங்கை நிர்வாக சேவையில் அதியுயர் சிறப்புப் பிரிவுக்கு கடந்த வாரம் அவர் தரம் உயர்த்தப்பட்டிருந்தார். அதன் பலனாக அவர் வடமாகாண சபையின் உயர் பதவிக்காக விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் உமாமகேஸ்வரனின் காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

ஆலயங்களின் வளர்ச்சிக்கு அரசியல்வாதிகளின் அழுத்தங்களையும் தாண்டி அர்ப்பணிப்பான பங்களிப்பு வழங்கினார் அவர். பிரதேசவாதம் இன்றி அவர் பணியாற்றினார்.

இந்துசமய அறநெறிக் கல்வி ஆழமானது. அழகுறக் கற்றுக் கொண்டால் அற்புதமானது என்பதை எல்லோருக்கும் உணரச் செய்தார். இந்துமத அறநெறிக் கல்வியில் எவரும் புரியாத சாதனை புரிந்தவர் அவர். இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தை வடக்கில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கற்கைகள் நிறுவகமாகவும்,

கிழக்கில் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவகமாகவும் ஏனைய மாகாணங்களுக்காகத் தலைநகரிலே சேர்.பொன். இராமநாதன் கற்கைகள் நிறுவகமாகவும் அமைத்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் நின்று நிலைக்கும் எத்தனையோ பணிகளை உமா மகேஸ்வரன் முன்னெடுத்தார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தை செழிப்படையச் செய்த பெருமையும் அவரையே சாரும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மாநாடு, உலக அரங்கையே ஒன்று கூட்டிய முருகபக்தி மாநாடு என்றெல்லாம் சிறப்பாக ஒழுங்கு செய்தார்.

கலைஞர்களுக்கான கௌரவம், ஆராய்ச்சி மாநாடுகள், நாட்டாரியல் வழக்காறுகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். பொங்கல விழா, புத்தாண்டு விழா, நவராத்திரி விழா என்று பலவிழாக்களை சிறப்பாக நடத்திக் காட்டினார்.

நல்லூர்க் கந்தப்பெருமானின் காலடிகளில் வைத்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நூல் வெளியிட்டது உலக வரலாற்றில் முதல் நிகழ்வாக அமைந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் படைத்த கந்தபுராண வசனம் மீள்பதிப்பே அந்த வெளியீடாக அமைந்தது. இந்து சமய அறநெறிக் கல்வி சார்ந்த நூல்கள் உலகத் தரம் வாய்ந்தவையாக மாற்றம் பெற்றன. கொரோனா காலம் அத்தனை அரச நிர்வாகச் செயற்பாடுகளையும் முடக்கியபோதும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகப் புதிய பரிணாமம் எடுத்தது. வானொலி ஊடகங்கள் மூலம் இணையத்தளங்கள் முகநூல் வழியாக அந்த வேளையிலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தைப் பயணிக்க வைத்த பெருமை அவரையே சாரும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு எவராலும் நிரப்பப்பட முடியாத வெற்றிடத்தை இந்தப் பதவி உயர்வு ஏற்படுத்தி விட்டது.

**எட்டு வருட அர்ப்பணிப்பான சேவையின் பின்னர் பதவியுயர்வு பெற்று வடமாகாணத்துக்கு செல்கிறார் இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர்**

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா
(முன்னாள் தலைவர்,
சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றம் காரைதீவு)

# மக்கள் மனதில் நீங்காமல் உள்ளோர் என்றென்றும் நினைவு கூரப்படுவர்

**கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த நினைவேந்தல் நிகழ்வில் ரவூப் ஹக்கீம் எம்.பி**

மறைந்த திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன், சிரேஷ்ட சட்டத்தரணி ராஜகுலேந்திரா ஆகியோர் வித்தியா சமான பன்முக ஆளுமை கொண்டவர்கள். அவ்வாறே இந்த அரங்கத்திற்கு பெயர் சூட்டப்பட்டிருக்கும் மறைந்த கலாநிதி எம். ஏ.எம். ஷுக்ரி, மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் ஆகியோரும் அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளனர். இத்தகையோரின் பங்களிப்புகள் எமது மக்களின் மனங்களில் நீங்கா இடம்பெற்று அவர்கள் என்றென்றும் நினைவுகூரப்படுவர் என கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை(2) மாலை நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 'புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம்' கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

மறைந்த கே.எஸ். சிவகுமாரன் ஏனைய ஊடகவியலாளர்களை விட வேறுபட்டவர். உள்நாட்டிலும் கடல் கடந்தும் அவர் பத்திரிகையாளராகவும் கல்லூரி ஆசிரியராகவும் பணிபுரிந்திருக்கின்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும் 42 நூல்களை எழுதியுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் பெற்றிருக்கின்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும்பத்தி எழுத்தாளராகவும், அதேவேளையில் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் மிளிர்ந்த சிவகுமாரன், இவ்விரு மொழிகளிலும் தலைசிறந்த திறனாய்வாளராகவும் திகழ்திருக்கிறார்.

குறை காண்பதை நோக்கமாகக் கொண்டே விமர்சனங்கள் செய்யப்படுகின்றன என்ற கருத்து பரவலாக நிலவுவதால், விமர்சனம் என்பதை விட, திறனாய்வு என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துவதையே சிவகுமாரன் பெரிதும் விரும்பி இருக்கின்றார். எனது பார்வையில் மறைந்த பேராசிரியர் கே. சிவத்தம்பிக்குப் பின்னர் இவ்வாறான ஆளுமை கொண்டவராக சிவகுமாரன் இடம்பெறுகின்றார்.




மறைந்த சிவகுமாரனின் புதல்வர்கள் இருவரும் எனது இளமைக்கால தோழர்கள். புலம்பெயர்ந்து அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும் வசிக்கின்றனர். தமது தந்தையின் அபாரத் திறமைகளை அவர்கள் இதுவரையில் குறைவாகவே அறிந்து வைத்திருந்தனர் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. புலம்பெயர்ந்து வாழ்வோரின் குடும்பங்கள் பலவற்றில் இவ்வாறான நிலைமையைக் காண முடிகிறது.

மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி ராஜகுலேந்திரா 1977 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்திருந்தார். அங்கு தமிழ் மன்றத்திலும் அவர் அதிக பங்களிப்பைச் செய்துள்ளார். நானும் 1980 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு தமிழ்மன்றத்தின் தலைவராக பணிபுரியும் வாய்ப்பு எனக்கும் கிடைத்திருந்தது.

நண்பர் ராஜகுலேந்திரா நாவாண்மை மிக்கவர். அவர் நாடறிந்த சிறந்த நாவலர். ஆனால், சட்டத்தரணிகள் எல்லோருமே நாவண்மை மிக்கவர்கள் அல்லர். எல்லா சட்டத்தரணிகளும் மேடை அதிரப் பேசும் மேதாவிலாசம் கொண்டவர்களாகவே இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

திருக்குறளுக்கு பொருள் கோடல் செய்கின்ற விஷயத்தில் மறைந்த நண்பர் ராஜகுலேந்திராவுக்கு அபாரத் திறமை இருந்திருக்கிறது. நாங்களும் பரிமேலழகர் போன்றோரின் உரைகளை வாசித்திருக்கிறோம். ஆனால் ,இவருக்கு அத்துறையில் அதிக ஈடுபாடு இருந்திருக்கிறது. இயல்பாகவே திருக்குறளுக்கு பொருள் கோடல் செய்வதில் அவர் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்.

இந்த தமிழ்ச்சங்கம் கொழும்பில் வசிக்கும் தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அதன் தொண்டு நாடறிந்தது. அதற்கான கட்டமைப்பை உருவாக்குவதில் ராஜகுலேந்திரா முக்கிய பங்கு வகித்திருக்கிறார். பேரவை உருவாக்கம், யாப்புத் திருத்தம் என்பவற்றிலும் அவரது ஈடுபாடு குறிப்பிட்டுக் கூறத்தக்கது. தமிழ்ப் பண்பாட்டை அதிகம் நேசித்தவராகவே அவர் வாழ்ந்து மறைந்திருக்கின்றார்.

இவ்வாறிருக்க தமிழ்,ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்த மறைந்த கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, இஸ்லாமிய ஆன்மீக கல்வியையும் நவீன கற்கை நெறிகளையும் ஒருசேர போதிப்பதற்காக மறைந்த நளீம் ஹாஜியாரினால் உருவாக்கப்பட்ட ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளராக மிக நீண்டகாலம் பணி புரிந்திருக்கிறார்.

அவரின் நினைவாகவும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் நாட்டாரியலிலும், இஸ்லாமிய பண்பாட்டுப் பாரம்பரியத்திலும் பெரும் பங்களிப்பை செய்து மறைந்த மருதூர் ஏ. மஜீதின் நினைவாகவும் இந்த நினைவேந்தல் நிகழும் அரங்கை ஏற்பாடு செய்திருந்தோம்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத், சாஹித்ய ரத்னா மு. சிவலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம். அமீன், வைத்திய கலாநிதி 'ஞானம்' ஞானசேகரம் ஆகியோரும் உரையாற்றினர்.

# கொமர்ஷல் வங்கிக்காப்புறுதி கூட்டாண்மையில் கைகோர்த்த AIA இன்ஷூரன்ஸ் நிறுவனம்

உலகின் முதன்மையான மற்றும் மிகப்பெரிய காப்புறுதி வழங்குநராகிய (சந்தை மூலதனம் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள) AIA குழுமத்தின் ஒரு பகுதியாகத் திகழும் AIA ஸ்ரீலங்கா இலங்கையின் மிகப்பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி சிலோனுடனான டிஜிட்டல் முறையிலமைந்த மிகவும் வலுவான வங்கிக்காப்புறுதிக் (Bancassurance) கூட்டாண்மையில் கைகோர்த்திருக்கின்றது.

இந்தக் கூட்டாண்மையானது AIA இன் கவர்ச்சிகரமான மற்றும் உறுதியான முன்மொழிவுகள், இதனது டிஜிட்டல் நிபுணத்துவம் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட வங்கிக் காப்புறுதி நிபுணத்துவம் ஆகியவற்றுடன் இலங்கை முழுவதும் 260 இற்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ள கொமர்ஷல் வங்கியின் வலையமைப்பு மற்றும் இதனது பெறுமதியான வாடிக்கையாளர் தளம் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கின்றது.

AIA மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகிய இரண்டும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடனான (IFC) மிகவும் நீண்ட காலப் பங்காளர்களாகும். பணியில் பெண்கள் IFCDFAT திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள பெண்களுக்கான நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் அணகி கணக்கை வைத்திருப்பவர்களுக்காகப் பிரத்தியேகமான காப்புறுதித் தீர்வுகளை வழங்கக்கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் இதற்கு முன்னர் கொமர்ஷல் வங்கி AIA உடன் கைச்சாத்திட்டுள்ளது.





"இலங்கையில் மிகப்பெரிய தனியார் வங்கியாகிய கொமர்ஷல் வங்கியின் பிடித்தமான காப்பீட்டுப் பங்காளராகுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். கொமர்ஷல் வங்கியுடனான எங்களுடைய வங்கிக் காப்புறுதிக் கூட்டாண்மையானது ஏற்கனவே நாங்கள் அடைந்து கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்கினைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையில் நீண்டகால வியாபார வரலாற்றுச் செயற்பாடுகளைக் கொண்ட இரு நம்பிக்கையான நிதி நிறுவனங்களை ஒன்று சேர்ப்பதுடன், இலங்கை முழுவதும் ஆயுள் மற்றும் ஆரோக்கியக் காப்புறுதித் திட்டங்களின் ஊடுருவலையும் அதிகரிக்கின்றது" என AIA இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி/ நிறைவேற்றுப் பணிப்பாளர் சத்துரி முனவீர தெரிவித்திருந்தார்.

கொமர்ஷல் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் மிகப்பெரிய தனியார் வங்கியாகத் திகழும் நாங்கள் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதியை வழங்கக்கூடிய உலகத் தரம் வாய்ந்த திட்டங்களையும் மற்றும் சேவைகளையும் வழங்குவோம் என நம்பியே எங்களின் வாடிக்கையாளர்கள் எங்களிடம் வருகின்றனர். இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி வழங்குநருடன் கூட்டாண்மையினை ஏற்படுத்துவதன் மூலமாக எங்களுடைய வாடிக்கையாளர்களின் தேவைகளுக்குப் பொருத்தமான பாதுகாப்பினை வழங்கக்கூடிய உயர்தரமான மற்றும் கச்சிதமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதித் திட்டங்கள் மற்றும் சேவைகளை அணுகுவதற்கான வசதியினை அவர்களுக்கு எங்களால் வழங்க முடியும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

புதிய கூட்டாண்மை ஏற்பாடுகள் ஆரம்பகட்டமாக கொழும்பு மற்றும் இதனது புறநகர் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுவதோடு படிப்படியாக நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கொமர்ஷல் வங்கியின் கிளைகளிலும் முன்னெடுக்கப்படும்.

# நகர்வலம்



## ஜம்இய்யதுல் உலமா ஹொரவப்பொத்தான கிளை ஏற்பாட்டில் விசேட கருத்தரங்கு



திறப்பனை தினகரன் நிருபர்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் ஹொரவப்பொத்தான கிளையினால் உலமாக்களுக்கென்று ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று அண்மையில் ஹொரவப்பொத்தானையில் நடைபெற்றது.

கருத்தரங்கின் கருப்பொருளாக "உலமாக்களின் பொறுப்புக்களும், குத்பா பிரசங்கங்களை வினைதிறனாக அமைத்துக் கொள்வதும்" என்ற தலைப்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஹொரவப்பொத்தான ஜம்இய்யா கிளை தலைவர் அஷ்ஷெய்க் டி.எம். தஸ்லிம் (ரஹ்மானி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட சொற்பொழிவாளராக வெலிகம பாரி அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் அப்துர் ரஹ்மான் (மழாஹிரி), அநுராதபுர மாவட்ட ஜம்மிய்யா கிளை தலைவர் அஷ்ஷெய்க் ஆதம் யாஸீன் (ரஹ்மானி) ஆகியோர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந் நிகழ்வில் பிரதேசத்தின் 110 உலமாக்கள் மற்றும் அறிஞர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர் என கிளை செயலாளர் அஷ்ஷெய்க் என். பி.நிலாம்தீன் (பஹ்ஜி) தெரிவித்தார்.

## உணவு நெருக்கடியை அரசியல் கோணத்தில் தீர்க்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் ரோகன திஸாநாயக்க

(அக்குறணை குறூப் நிருபர்)



உணவு நெருக்கடியைத் குறைப்பது தொடர்பான வேலைத்திட்டங்களை அரசியல் கோணத்தில் நோக்காது தேசிய பிரச்சினையாகக் கொண்டு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகன திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சத்துணவுத் திட்டத்திற்குள் பிரவேசிப்பதன் மூலமே தற்போதைய நெருக்கடிக்கு பெரும்பாலும் தீர்வு காண முடியும், ஆனால் இந்தச் சமயத்தில் சத்துணவுத் திட்டம் பற்றிய விடயங்களை நிறக்கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு பார்க்கக் கூடாது. அதாவது இந்தப் பிரச்சினையை அரசியல் கோணத்தில் பார்ப்பது முட்டாள் தனமாகும்.

மாத்தளை, தென்ன மகா வித்தியாலயம் மற்றும் ஓவிலிகந்த மகாவித்தியாலயம் என்பவற்றை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதன் மூலம் நகரப் பாடசாலைகளில் நிலவும் நெரிசலுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கும் படியும் அவர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

கிராமப்புற வசதிகளை மேம்படுத்தி திறமையான மாணவர்களை உருவாக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் பல்வேறு காரணங்களால் புறக்கணிக்கப்பட்டு வரும் மாத்தளை இளைஞர் சேவை மன்ற கட்டிடத்தை புனர் நிர்மாணம் செய்ய உள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், எட்டு வருடங்களுக்கு மேல் புறக்கணிக்கப்பட்டு வரும் மாத்தளை பெர்னாட் அலுவிஹார விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நாலக பண்டார கோட்டேகொட, மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஷ், தம்புள்ளை மேயர் ஜாலிய ஓபாத்தா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## புதையல் தோண்டிய இராணுவ கோப்ரல் உள்ளிட்ட குழுவினர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கடவல அரச வனப்பகுதியில் புதையல் தோண்டிய இராணுவ கோப்ரல் உள்ளிட்ட குழுவினரை கடந்த (01) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஜசிங்கபுர பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும் 35 வயதுடைய கோப்ரல் ஒருவரும் வஹமல்கொல்லாவ, புளியங்குளம், அழுத்கம, தர்கா நகர் மற்றும் பதவிய பராக்கிரமபுர பகுதிகளைச் சேர்ந்த 25,30,35, 45 மற்றும் 56 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

சந்தேக நபர்கள் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட மின் பிரப்பாக்கி, பல அலவாங்குகள் மற்றும் மண் வெட்டி உள்ளிட்ட பொருட்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14 ம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பட்டுள்ளனர்.

## அம்பலாங்கொடையில் நீர்வளப் பாதுகாப்பு செயலமர்வு




(பேருவளை விசேட நிருபர்)

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நீர்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு, நீர் மாசடைவதை தவிர்த்தல் தொடர்பாக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களிடையே விழிப்புணர்வு செயலமர்வுகளை நடாத்தி வருகிறது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைமை அலுவலக மக்கள் தொடர்பாடல் பிரிவின் ஏற்பாட்டிலான மற்றுமொரு செயலமர்வு அண்மையில் அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அம்பலாங்கொடை பிரதேச செயலக பிரிவிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட இச்செயலமர்வில் பிரதேச செயலாளர் எம்.ஜி.எச். நிரோஷனி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சிரேஷ்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரி ஹேமந்த அபயக்கோன், சிரேஷ்ட சமூகவியலாளர் சுபாசினி சொய்ஸா ஆகியோர் இங்கு உரைநிகழ்த்தினர்.

நீர் மாசடைதல், நீர் சுத்திகரிப்பு முறைகள், நீர்க்கட்டணம் அறவிடப்படும் முறை, மழைநீர் சேமிப்பு தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டன. அம்பலாங்கொடை பிரதேச செயலக அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் பலரும் இச்செயலமர்வில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இந்தோனேசிய நட்புறவு சங்க 30வது வருட நிறைவு விழா

ருஸைக் பாரூக்



இலங்கை இந்தோனேசிய நட்புறவு சங்கத்தின் 30வது ஆண்டு நிறைவை ஒட்டி இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் இலங்கை இந்தோனேசிய நட்புறவுச் சங்கம் ஏற்பாடு செய்த "கலாசார மற்றும் வர்த்தக கண்காட்சி" கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரக வளாகத்தில், இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் *Dewi Gustina Tobing* அவர்களின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது,

நிகழ்வில் இந்தோனேசிய தூதுவர் வர்த்தக கண்காட்சியை திறந்து வைத்து கண்காட்சிகளை பார்வையிட்டார். பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி வருணி விஜேவர்தன கலந்து சிறப்பித்ததோடு நட்புறவு சங்கத்தின் தலைவி திருமதி மர்லீனா லக்ஸ்லானா உரை நிகழ்த்தினார்.

அமெரிக்கா, பிரிட்டன், மாலைத்தீவு, தாய்லாந்து, மலேசியா, பங்களாதேஷ், தென் கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களும் கலந்து கொண்டனர்.



கண்டி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் மௌளவி I.M. நிஸாம் அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தேசாபிமானி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவருக்கான சான்றிதழை நியூசிலாந்து தூதுவர் வழங்கி வைப்பதைக் காணலாம். இவர் தெல்தோட்டை M.M. இப்ராஹிம் தம்பதிகளின் மூத்த புதல்வராவார்.

## பிரதிக் கல்விப் பணிப்பாளராக ஷெய்க் மஷாயிர் நியமனம்



(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாண முன்னணி பாடசாலைகளிலொன்றான மின்ஹாத் தேசிய பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியேற்றுள்ளார். மேற்படி பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்ற இவர், பின்னர் ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் 7 வருட கால கல்வியை பூர்த்தி செய்து பட்டதாரியாக வெளியேறினார். அதன் பின் தான் படித்த பாடசாலையிலேயே சுமார் 15 வருடங்கள் அதிபராக பணிபுரிந்த அவர், அண்மையில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக (தமிழ் மொழி மூலம்) நியமனம் பெற்றுள்ளார். முன்னாள் சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான மர்ஹூம் எம்.எச்.எம். சம்ஸின் சகோதரரின் புதல்வரான இவர், மர்ஹூம்களான மொஹமட் அலி, பாத்திமா சாக்கிரா தம்பதிகளின் புதல்வராவார்.



நபி ஸல் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் வருடாந்தம் நடைபெற்று வரும் மௌலூத் ஓதல் நிகழ்வு மௌலவிகளான ரிஸ்கான் முஹம்மத், எம்.ஏ.எம்.ஹுசைன், மௌலவி எம்.எஸ்.எம்.ஸப்ராஸ் தலைமையில் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். உலமாக்களும் ஜமாத்தார்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## சாதுலிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ்

கம்பளை நகரில் ராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள செய்ஹ் சம்ஸ் அல் பாஸி ஸாவியாவில் வருடாந்தம் நடைபெற்றுவரும் சாதுலிய்யா மனாகிப் தமாம் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

மாத்தறை மின்னதுல் பாஸியா அரபுக் கல்லூரி முதல்வர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம். எஸ்.எம். இஸ்திகார் ஆலிம் (பாரி) முஸாக்கரா நிகழ்த்தினார்.

முகத்தமுஷ் ஷாதுலி எம்.யூ.எம். இப்றாஹிம் ஹாபிஸ் தலைமையில் தொடர்ந்து 7 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் நடைபெற்று தமாம் வைபவத்துடன் நிறைவுற்றது.



பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸறா தேசிய பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வுகள் திங்கட் கிழமை (03) நடைபெற்றபோது, ஆண்டு 09இல் கல்வி கற்கும் மாணவர்கள் தமக்கு கற்பிக்கும் சிராப் ஆசிரியருடன் ஒன்றாக இணைந்து எடுத்துக்கொண்ட படம்.

## ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

இருநூறு கிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பிள்ளையார் சந்திப் பகுதியில் வைத்து அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய (03) பிள்ளையார் சந்திப் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 201 கிராம் ஹெரோயின் போதைப் பொருளினை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 43 வயதுடைய நிதஹஸ் மாவத்தை, அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்காக வேண்டி அநுராதபுரம் நீதிமன்றில் பெற்றுக் கொண்ட தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பல கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தளம் IFM முன்பள்ளியின் 50ஆவது வருட பூர்த்தி விழா

(புத்தளம் தினகரன் நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புத்தளத்தின் முதல் தமிழ் மொழி மூல பாலர் பாடசாலையான ஐ.எப்.எம் முன்பள்ளியின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவோடு கூடிய, அதன் வருடாந்த டைனி டொட்ஸ் விளையாட்டு போட்டிகள் (3) புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அதன் பொறுப்பாசிரியை எம். எஸ். பௌசுல் ரூஸி தலைமையில் மிக விமரிசையாக இடம்பெற்றது.

முன்பள்ளியின் முகாமைத்துவப் பணிப்பாளரும், ஊடகவியலாளருமான எம்.யூ.எம். சனூன் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கினார். நிகழ்வின் பிரதம அதிதியாக புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் கலந்து சிறப்பித்தார்.

50 மீட்டர் ஓட்டம், பழம் சேகரித்தல், பலூன் உடைத்தல், பூ கோர்த்தல், போத்தலில் நீர் நிறைத்தல், சாக்கு ஓட்டம், கால் கட்டி ஓட்டம், சீருடை அணிதல் உள்ளிட்ட பல போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மற்றும் கலந்துகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் அதிதிகளால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் கௌரவ அதிதிகளாக நகர சபை உறுப்பினர்கள் ரனீஸ் பதூர்தீன்,ஜௌபர் மரைக்கார்,பர்வின் ராஜா, ஆரிப் சிஹான்,ஜெமீனா இல்யாஸ் உள்ளிட்ட போட்டி அனுசரணையாளர்கள் அரசியல் பிரமுகர்கள், கல்வி அதிகாரிகள், சமய தலைவர்கள், புத்தி ஜீவிகள், சமூக ஆர்வலர்கள், ஏனைய முன்பள்ளிகளின் ஆசிரியைகள் மற்றும் பல கௌரவ அதிதிகளுடன் நகரசபை உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## தங்கத்தின் விலையில்...

ஏற்ப தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, 22 கரட் தங்கத்தின் விலை 1,63,800 ரூபாயாகவும், 24 கரட் தங்கத்தின் ஒரு பவுன் விலை 1,77,000 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

## உள்நாட்டு பால்மா...

விலை 125 ரூபாவினால் அதிகரிக்கப்படுகிறது. இதன்படி 850 ரூபாவாகவிருந்த 450 கிராம் பால்மா பக்கெற் ஒன்றின் விலை 975 ரூபாவாக அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்களிடம் கோடிக்கணக்கில்...

பிரிவினர் பாணந்துறை, ஹிரண பிரதேசத்தில் கைது செய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் தொழிலதிபர் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர் போன்று நடித்து திருமண விளம்பரங்களுக்கு பதிலளிக்கும் பெண்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதாகவும், இவரின் மோசடியில் சிக்கிய பெண்களில் பாடசாலை ஆசிரியர்களும் அதிக எண்ணிக்கையிலுள்ளனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய இவரே, 'ராகுல ஜயசிங்க என்ற பெயரில் தன்னை அறிமுகம் செய்து மணமக்களின் வீடுகளுக்குச் சென்று மோசடி செய்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

## சீமெந்து விலை நேற்று...

குறைப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரவுள்ளதாக இந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன. கட்டுமானத் துறைக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இறால் தொட்டிலில் மிதந்து...

அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணையிலுள்ள தொட்டியில் சடலம் காணப்பட்டதாகவும் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மலேசிய உயர்ஸ்தானிகருடன்...

மலேசியாவுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஹட்டனிலுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்க்களை புதிதாக மலேசியா அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட *quota system* மூலம் உள்வாங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## இலங்கை... (03ஆம் பக்க தொடர்)

சிறந்த அனுபவம் இருப்பதனால் அது இரு நாடுகளுக்குமான பொது பிரச்சினை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், அண்மையில் எதிர்நோக்கிய உலகளாவிய தொற்று நோய் மற்றும் சுற்றாடல் அச்சுறுத்தல் ஆகியவற்றின்போது அனைவரும் ஒன்றாக இணைந்து முகம் கொடுக்க வேண்டுமென்றும் அதற்காக ஒவ்வொருவரும் தமது பங்கை மிகச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச ஊழியர்களின்... (03ஆம் பக்க தொடர்)

செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.இது முற்றிலும் தவறானது.

நாட்டில் 30 இலட்சம் வரையிலான குடும்பங்கள் நிவாரணங்களை எதிர்பார்த்திருக்கின்றன. அதேபோன்று நிலையான சம்பளமொன்றுக்குள் காணப்படும் அரச ஊழியர்களின் குடும்பங்களும் உணவு பண வீக்கம் அதிகரிக்கும் போது பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய பின்னணியில் சமூக வலைத்தளங்கள் வெளியிடும் செய்திகளில் எத்தகைய உண்மையும் கிடையாது. அதை வேளை அது தொடர்பில் அரசாங்கம் எந்தவித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை.

அரசாங்கம் 93 பில்லியன் ரூபாவை மாதாந்தம் சம்பளத்திற்காக ஒதுக்குகின்றது.ஓய்வூதியத்திற்காக 21 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது. எனினும் எந்த கட்டத்திலும் அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்படவில்லை. அரச சேவையை பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.

அரசாங்கம் வருமானத்தை அதிகரிக்க வேண்டிய பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளது. அதன்படி முறையாக வருமானத்தை அதிகரிக்க வேண்டும். முடிந்தளவுக்கு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு சுமையின்றி அதனை முகாமைத்துவம் செய்வதற்கே அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சீனாவுடனான சுதந்திர... (03ஆம் பக்க தொடர்)

நிறுத்தினால் மாத்திரமே முதலீட்டாளர்கள் இங்கு வருவார்கள். முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் எப்படியிருந்தாலும் பிரச்சினையில்லை. அவர்களுக்கு முதலில் மோசடிகளற்ற அரசாங்கமாக முக்கியமானது.

அதேவேளை சீனாவுடன் செய்யவுள்ள வர்த்தக உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்ன என்று அறிந்துகொள்ள வேண்டும்.

அதனை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். அதனை செய்யாது கையெழுத்திட்டால் இந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களால் பல்வேறு துறைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்ற சந்தேகங்கள் உள்ளன.

அதன் உள்ளடக்கம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கோப், கோபா குழு... (03ஆம் பக்க தொடர்)

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.அதனையடுத்து சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பணம், வாய்மூல விடைக்கான வினாக்கள் இடம்பெற்றன. அதன்பின் எழுந்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச "கோப் குழு " தொடர்பான கூற்றுக்களை சபையில் முன் வைத்தார்.

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு நாம் சபையிலும் சபைக்கு வெளியிலும் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். அத்துடன் இந்த பதவிகளின் தலைமைப் பதவிகளுக்கு கபீர் ஹாசிம் மற்றும் இரான் விக்கிரமரத்ன ஆகியோரை பரிந்துரை செய்திருந்தோம்.

அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டதுடன் தற்போதைய ஜனாதிபதி பிரதமராக பதவி வகித்த போது எமது கோரிக்கைக்கு சபையில் இணக்கம் தெரிவித்திருந்தார்.

எனினும் தற்போது அந்த குழுக்களுக்கான தலைவர் பதவி வேறு முறைமைகளில் வேறு நபர்களை நியமிக்கப்போவதாக தகவல் கிடைத்திருக்கின்றது.

அதனால் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கின்றது.

எனவே அன்று பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மற்றும் சபாநாயகரும் வாக்குறுதி அளித்தபடி கோப் மற்றும் கோபா குழுங்களின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சபையில் தெரிவித்தார்.

## கடற்றொழிலுக்கு... (03ஆம் பக்க தொடர்)

ஜயவர்த்தன எம்.பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

2022 13ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி சட்டத்தின் கீழ் பெருமளவிலான பொருட்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கடற்றொழிலுக்கு உபயோகப்படுத்தப்படும் உபகரணங்களும் இயந்திரங்களும் உள்ளடங்குகின்றன. அவ்வாறு மீனவர்களுக்கு அவசியமாக தேவைப்படும் உபகரணங்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதில் காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கிணங்க உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

அந்த வகையில் வெளிநாடுகளின் உதவிகளைப்பெற்றுக் கொண்டு மேற்படி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறான உபகரணங்களை மானிய அடிப்படையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்றமும் ... (03ஆம் பக்க தொடர்)

கருத்துத் தெரிவித்த கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி பிரதீப் பீரிஸ் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திசாநாயக ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

## தோட்ட தொழிலாளருக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு அதிகரிப்பு குறித்து சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

## மேலும் சில சேவைகள்...

பணிப்புக்கமைய, ஜனாதிபதி செயலாளரினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகளும், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல், விநியோகம் என்பனவும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், வைத்தியசாலைகள் உட்பட நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பங்களிப்புகளை வழங்கும் அனைத்து நிறுவனங்களும் இந்த அதிவிசேட வர்த்தமானி மூலம் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## 2023 வருட மொத்த மீண்டு வரும்...

வெளியிட்டு அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு (03) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

## IMF ஒப்பந்த விபரங்கள் யாவும்...

ஒரு வரைவு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பான விடயம் பாராளுமன்றத்தில் பல தடவைகள் எழுப்பப்பட்டதாகவும் அவைத் தலைவர் மற்றும் நிதி அமைச்சர் இந்த விடயம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## ஓய்வூதிய வயதெல்லையை...

நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக மாற்றியமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இடைக்கால வரவு செலவு திட்டத்தின் போது கட்டாய ஓய்வு வயது 60 ஆக அறிவிக்கப்பட்டது

அதற்கமைய, 2023.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதற்கான ஒழுங்கு விதிகளை விதித்து ஏற்புடைய சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கருத்துச் சுதந்திரத்துக்கு...

செயற்பட்டால் அதன் பிரதிபலனை அரசாங்கம் வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (04) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிதி அமைச்சின் வரிச் சலுகைகள் மற்றும் சில வரிச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதை தவிர்த்து விட்டு அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகளை பின்தொடர்ந்து செல்கிறது.பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப்பதற்காக மக்கள் அபிப்பிராயத்தை கோரும் வகையில் காங்சேசன்துறை தொடக்கம் தங்காலை வரை கையெழுத்து சேகரிப்பு பயணத்தை மேற்கொண்டோம்.

அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை எம்மால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று வேளை உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கு தீர்வு காண அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குமாறு பலமுறை வலியுறுத்துகிறோம். 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் முதலீடுகளை தடை செய்தார், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அத்தடையை நீக்கினார்.

அடுத்த ஜனாதிபதி எவ்வாறு செயற்படுவாரென்பதை எம்மால் குறிப்பிட முடியாது. நாட்டு மக்களின் கருத்து சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரசாங்கம் செயற்பட்டால் இந்த அரசாங்கமும் நெடுநாள் பதவியில் இருக்காது என்றார்.

## எரிபொருள் விலை அடுத்த இரு...

உறுப்பினர் கின்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைப்பை தொடர்ந்து தேசிய மட்டத்தில் எரிபொருள் விலையை தீர்மானிக்க முடியாது. பெற்றோல் இறக்குமதியில் இலாபம் கிடைக்கப்பெற்றதால் விலை குறைக்கப்பட்டுள்ளது. நாட்டில் எரிபொருள் விநியோக கட்டமைப்பில் சிக்கல் காணப்படுகிறது என்பதை அனைவரும் நன்கு அறிவர். மசகு எண்ணெய் ஊடாக மாத்திரம் நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய முடியாது.

மொத்த எரிபொருள் தேவையின் 30 சதவீதமளவு மாத்திரம் தான் மசகு எண்ணெய் சுத்திரகரிப்பு ஊடாக பெற்றுக்கொள்ளப் படுகிறது. 70 சதவீதமளவு எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடையும் போது தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையை குறைக்க முடியாது.

டீசல் விநியோகத்தில் இதுவரை காலமும் வழங்கப்பட்ட நிவாரணம் நீக்கப்பட்டுள்ளது. டீசல் விநியோகத்தின் நிவாரணம் நீக்கப்பட முன்னர் ஒரு லிட்டர் டீசல் விநியோகத்தின் போது 30 ரூபா நட்டத்தை எதிர்க்கொள்ள நேரிட்டது.

ஆகவே தற்போது டீசலின் விலையை குறைக்க முடியாது. பெற்றோல் இறக்குமதியில் 70 சதவீத இலாபத்தை பெற்றுக் கொண்டுள்ளதால் பெற்றோல் விலை குறைக்கப்பட்டது என்றார்.

## சுயாதீனமாக செயற்படும்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோப் குழு உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான சர்ச்சையின் போதே தயாசிறி ஜயசேக்கர எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 35 உறுப்பினர்களில் அறிவார்ந்த பெரும்பாலானோர் கோப் குழுவுக்கு நியமிக்கப்படவில்லை. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக எமது பாராளுமன்ற உரிமை மறுக்கப்படுகிறது

அரசாங்கத்தின் குறைப்பாடுகளை பகிரங்கப்படுத்துவதால் எமது பாராளுமன்ற உரிமை மறுக்கப்படுகிறது. சுயாதீன உறுப்பினர்களான சுதர்ஷனி பெர்னான்டோ புள்ளே,திஸ்ஸ விதாரன,ரத்ன சேக்கர உள்ளிட்ட பெரும்பாலானவர்கள் கடந்த கோப் குழுவின் உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்..சுயாதீன தரப்பினர்களின் நான் உள்ளிட்ட அறிவார்ந்த பெரும்பாலானோர் கோப் மற்றும் கோபா குழுக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 18 வருடகாலமாக கோப் மற்றும் கோபா குழுக்களின் உறுப்பினராக பதவி வகித்துள்ளேன்.எந்நிலையிலும் ஊழல் மோசடியாளர்களுக்கு துணைபோகவில்லை.அரச நிறுவனங்களின் பல மோசடிகளை அறிக்கையிட பொறுப்புடன் செயற்பட்டுள்ளேன்.எனினும் என்னையும் கூட நீக்கியுள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதனையடுத்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எம்.பி.,ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் பெரும்பாலான உறுப்பினர்கள் கோப் குழுவுக்கு நியமிக்கப்படவில்லை.

மாறாக ஏழு மூளையுடையவரின் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வெட்கப்பட வேண்டும் கோப் குழுவின் உறுப்பினர் நியமனத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர்களுக்கு இடமளிக்கப்படவில்லை. கோப் குழு உறுப்பினர் நியமனத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதி திருத்திக்கொள்ளப்பட வேண்டும்.

.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி, கோப் குழு உறுப்பினர் நியமனத்தில் எவரது பெயரையும் நாம் நீக்கவில்லை. தவறான கருத்து தோற்றுவிக்கப்பட்டுள்ளது.யார் பெயர்களை நீக்கினார்கள் என்பதை வெளிப்படைத் தன்மையுடன் குறிப்பிடவில்லை.

ஆகவே எதிர்க்கட்சி தலைவர் கோப்குழுவுக்கு சரித ஹேரத்தின் பெயரை பரிந்துரைத்துள்ளார் என்றார்.

இதன்போது மீண்டும் கருத்து தெரிவித்த விமல் வீரவன்ச நான் ஏழு அறிவுடையவர் என எதிர்கட்சிகளின் பிரதம கொறடாவை குறிப்பிடவில்லை.ஆளும் தரப்பில் இருந்தவரையே குறிப்பிட்டேன் என்றார்.

இதன்போது எழுந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி சுயாதீன எம்.பி. டளஸ் அழகபெரும:

விமல் வீரவன்ச,தயாசிறி ஜயசேக்கர ஆகியோர் தமது தனிப்பட்ட தேவைகளை குறிப்பிடவில்லை. கோப் மற்றும் கோபா ஆகிய முக்கிய குழு நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது,கருத்து சுதந்திரத்துக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் முக்கிய தீர்மானங்களின் இறுதி தீர்மானத்தை எடுக்கும் உரிமை சபாநாயகருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

ஆளும் மற்றும் எதிர் தரப்பு மற்றும் நாட்டு மக்கள் மத்தியில் கோப் குழுவின் முன்னாள் உறுப்பினர் சரித ஹேரத்திற்கு அங்கீகாரமுள்ளது.பல மோசடிகளை அவர் பகிரங்கப்படுத்தினார்.அரசாங்கம் ஏன் இவ்வாறு செயற்படுகிறது. என்பது கேள்விக்குறியானது.

ஆகவே சபாநாயகர் பொறுப்புகளிலிருந்து விலகக் கூடாது.நாட்டு மக்கள் பாராளுமன்றத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.225 உறுப்பினர்களையும் வெறுக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளினால் நாட்டு மக்கள் அரசியல் கட்டமைப்பையும் கடுமையாக சாடுகிறார்கள். மறுபுறம் சுயாதீன உறுப்பினர்களுக்கு உரிய காலவகாசம் வழங்கப்பட வேண்டும்.தொடர்ந்து சபையை மலினப்படுத்த வேண்டாம் என்றார்.

இதன்போது உரையாற்றிய சபாநாயகர் கட்சி தலைவர் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.சுயாதீன தரப்பினருக்கு உரிய காலவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் தலையிட்டேன்.கோப் மற்றும் கோபா குழு உறுப்பினர் நியமனம் தொடர்பான தீர்மானம் கட்சி தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்டதே தவிர நான் அதில் தலையிடவில்லை என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி சுயாதீன எம்.பி.யான நிமல் லான்ஸா, பாராளுமன்ற நடவடிக்கை நிலையியல் கட்டளைக் கமைய இடம்பெற வேண்டும். ஆகவே ஒரு விடயத்தை பிடித்துக் கொண்டு வாத பிரதிவாதங்களை தொடர்வதை விடுத்து சபை நடவடிக்கை முன்னெடுத்து செல்ல இடமளிக்க வேண்டும் என்றார்.

இதனையடுத்து எழுந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம்.பி. எம். ஏ.சுமந்திரன் , நிமல் லான்ஸா உரையின் போது முட்டாள் என்ற சொற்பதத்தை பாவித்தார்,அதனை நீக்குவது மாத்திமல்ல அவரை சபையில் இருந்து வெளியேற்ற வேண்டுமெனவும் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இவ்வாறு தர்க்கம் நீடித்த நிலையில் நேரத்தை சுட்டிக்காட்டி சபாநாயகர் சபையில் ஏற்பட்ட சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு...

பொருட்களின் விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் துயரங்களைக் கடந்தே தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

மாதாந்த ஊதியத்தையும் சம்பள முற்பணத்தையும் நம்பியே தோட்டத் தொழிலாளர்கள் ஒரு மாதத்தைக் கொண்டு நடத்துகின்றனர். அதிலும் கூட ஒருசில தொழிலாளர் குடும்பங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கான செலவுடன் ஒரு மாதத்துக்கு போதுமான வருமானமின்றி, ஒரு நேர உணவை மட்டுமே உண்ணுபவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், தீபாவளிப் பண்டிகைக்காக பெருந்தோட்டங்களில் வழங்கப்படுகின்ற பண்டிகை முற்பணத்தை கருத்திற்கொண்டே தொழிலாளர்கள் தங்களது பண்டிகைக்கான செலவுகளை செய்ய திட்டமிடுவர்.

ஆடம்பரமான கொண்டாட்டங்களாக இல்லாவிட்டாலும் அவர்களது சிறிய சந்தோஷத்துக்காக இந்த பண்டிகை முற்பணத்தை திட்டமிட்டு செலவு செய்வர். ஆனால், பெருந்தோட்டப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இந்த பண்டிகை முற்பணம் முறையாக வழங்கப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுகளும் கடந்த காலங்களிலிருந்து இருந்துதான் வருகின்றது. அதுபோலவே இந்த வருடமும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் பெரும் துயரத்தைக் கொடுத்துள்ளன.

இதனை கருத்திற் கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் தான் முதலாளிமார் சம்மேளனத்துடன் கலந்துரையாடி தீபாவளி முற்பணமாக கடந்த கால தொகையை விட அதிகமாக வழங்குமாறு வலியுறுத்தினேன். கடந்த வருடம் 10,000 ரூபா தீபாவளி முற்பணமாக வழங்கியிருந்தனர். இந்த காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொருட்களின் விலை உயர்வு போன்றவற்றை கருத்திற்கொண்டு நாம் அதையும் விட அதிகமான தொகையை வழங்க வேண்டுமென கோரியிருந்தோம்.

இதனை ஏற்றுக்கொண்ட முதலாளிமார் சம்மேளனம் தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாவை வழங்க தீர்மானித்து. அதற்கான சுற்றுநிருபத்தை பெருந்தோட்டகம்பனிகளுக்குஅனுப்பிவைத்துள்ளது.

அதற்கமைய சுமார் 90 வீதமான கம்பனிகள் தீபாவளி முற்பணமாக 15,000 ரூபாவை வழங்க தீர்மானித்துள்ளது. ஓரிரு கம்பனிகள் இந்த தீபாவளி முற்பணத்தை வழங்க தவறும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் மிகவும் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும். எனவே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்பொழுதும் மக்களின் நலன் கருதி சேவை செய்யக்கூடிய ஒரு தொழிற்சங்கம் என்று மீண்டும் நிரூபித்துள்ளது என்றார்.

## மேலும் ஒரு மில். மாணவருக்கு...

சேர்ந்த 1.08 மில்லியன் மாணவர்களை இலக்காகக் கொண்டு மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்தப்படவுள்ளதாகவும் ஆண்டுதோறும் மதிய உணவை வழங்க 400 கோடி ரூபாய் கூடுதல் தொகையை ஒதுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, முழுத் திட்டத்தின் கீழ், 2.16 மில்லியன் பாடசாலை மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் இதற்கென மொத்தம் தொகை 800 கோடி ரூபாய் ஒதுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

வறுமையை ஒழிக்கும் கொள்கையின் கீழ், போஷாக்கு தொடர்பான எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்தில் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசு எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேலும் ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கியமான மதிய உணவு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வறுமை மற்றும் போஷாக்கு தொடர்பான மாவட்ட அளவிலான தரவுகளின் அடிப்படையில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மதிய உணவு திட்டத்துக்கு மேலதிகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாடசாலை மதிய உணவுத் திட்டத்துக்காக வருடாந்தம் 400 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் ஆனால் அதற்கு மேலதிகமாக மேலும் 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மதிய உணவுத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதன்படி மொத்த மாணவர்களில் சுமார் 51 வீதமானோர் குறிப்பாக கிராமப்புற பாடசாலை மாணவர்களின் உணவுப் பாதுகாப்பைப் பெறுவார்களென சுட்டிக்காட்டினார்.

யுனிசெப், உலக வங்கி, சீன அரசாங்கம் மற்றும் ஏனைய தனியார் அமைப்புகளின் ஆதரவைப் இத்திட்டத்துக்காக பெற்றுள்ளதாகவும் அமைச்சர் பந்துல தெரிவித்தார். இதனூடாக, "உணவின்மையால் எந்தவொரு குடிமகனும் பட்டினியால் வாடக்கூடாது" என்ற அரசாங்கத்தின் அடிப்படை நோக்கத்தை அடைவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்துமென அவர் தெரிவித்தார். இதற்கிடையில், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதற்காக "உணவுக் கொள்கைக் குழு" ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் வெகுஜன ஊடக அமைச்சின் ஆலோசகர் கலாநிதி மொஹான் சமரநாயக்க மற்றும் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பல்கலை கலைப்பீடத்தின் பீடாதிபதிக்கு மரண அச்சுறுத்தல்

எம்.ஏ.அமீனுல்லா

நாகரிகமற்ற நடத்தைகளில் ஈடுபடும் பல்கலை மாணவர்கள் குழுவினால் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏழாவது நிறைவேற்றுத் தலைவரை வீட்டுக்கு அனுப்பியதாகவும், தாங்கள் எமக்கு பெரிதல்ல என மாணவர் சங்கத் தலைவர் தம்மை அச்சுறுத்தியதாக அவர் கூறினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் புதிய மாணவர்களின் துன்புறுத்தலுக்கு ஆதரவான மாணவர்கள் குழுவொன்று, சட்ட பீட மாணவர்கள் மீது சிற்றுண்டிச்சாலையில் வைத்து தாக்கிய சம்பவத்தின் அடிப்படையில் தற்போதைய நிலைமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே பீடாதிபதி ஏக்க நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்துரையாற்றிய பீடாதிபதி,

புதிய மாணவர்களின் சித்திரவதைகளை ஏற்றுக்கொள்ளாத மாணவர்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களை மாணவர் சங்கங்கள் தடுத்து நிறுத்தத் தவறியதன் காரணமாகவே கலைப்பீடம் மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரினதும் கல்வி உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயற்பட்டு வருகின்ற போதும் அரசியல் கட்சிகளால் சூழப்பட்டுள்ள மாணவர்கள் எம்மை அச்சுறுத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாக இடம்பெற்ற துன்புறுத்தல் சம்பவங்கள் காரணமாக கலைப் பீடம் மூடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் புதிய மாணவர்கள் மூத்த மாணவர்களால் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். பல்கலைக் கழகத்தின் பொதுவான இடங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு அனுமதி இல்லை. கலை பீடத்தின் பிரதான பொது உணவகமான கெம்பாவில் மதிய உணவு சாப்பிடும் போது அவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். முன்னதாக பல்வேறு உணவகங்களில் இது நடந்தது. உடற்பயிற்சி கூடம், விளையாட்டு அறை போன்ற இன்னோரன்ன இடங்களில், சட்டக்கல்வித்துறை மாணவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். நானும் தலையிட்டு இதை நிறுத்தச் சொன்னேன். அதன்படி மீண்டும் தாக்குதல் நடத்த மாட்டோம் என முடிவு செய்யப்படும் மீண்டும் இரண்டு மணி நேரம் கழித்து அவர்கள் தாக்கினர். இதை செய்த சில மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மண்மேடு சரிந்ததால் பரிதாப மரணம்

# பெண்ணின் இறுதிக்கிரிகைக்கு 25,000 ரூபா உதவிப் பணம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்து, நேற்று முன்தினம் உயிரிழந்த 46 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான இராமசாமி காளியம்மாவின் இறுதிக் கிரியைகளுக்காக, நுவரெலியா மாவட்ட அனர்த்த நிவாரண நிலையம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இதற்கமைய, 25,000 ரூபாய் பணம், உயிரிழந்த பெண்ணின் கணவனிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத் மற்றும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் ஆகியோர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் குடும்பத்தாரிடம் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கையளித்துள்ளனர்.

முதற்கட்டமாக உயிரிழந்த தாயின் இறுதி கிரியைகளுக்காக. 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் இறப்புச் சான்றிதழ் வழங்கிய பின்னர் 75,000 ரூபாய் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குறித்த வீட்டின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று, அதற்கான இழப்பீட்டை வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார்.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வலப்பனை கல்வி வலையத்திற்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு "சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம்"எனும் தொனிப்பொருளில் அகரம் அறிவின் அரங்கம் அமைப்பின் பங்கேற்புடன் (03) பாடசாலை அதிபர் ப.முகுந்கமலவண்ணன் தலைமையில் நடைபெற்றது. படம் ஆ.ரமேஸ்

# மாத்தளை சுவாமி விவேகானந்தர் கலா மன்றத்தின் சிறுவர் தின நிகழ்வு






மாத்தளை சுழற்சி நிருபர்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாத்தளை சுவாமி விவேகானந்தர் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக அனுசரணையுடன் சிறுவர் தின நிகழ்வுகள் (1) மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் விமர்சையாக நடைபெற்றது. கலா மன்றத்தின் தலைவர் யோகராஜா செட்டியார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட மேலதிக செயலாளர், சிறுவர் பராமரிப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாத்தளை மாநகர சபை முதல்வர் எஸ். பிரகாஷ், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.சிவஞானம் உட்பட ஆலய அறங்காவலர் சபை தலைவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறுவர் பராமரிப்பு எனும் தொனிப் பொருளில் பல்வேறு உரைகளும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிறுவர் ஊர்வலம் ஒன்றும் இடம்பெற்றது.

இங்கு சிறுவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் சிறுவர் தின நிகழ்ச்சியை நடத்த அனுசரணை வழங்கிய அரச உத்தியோகத்தர்கள் பலரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளை மன்றத்தின் செயலாளர் தியாகராஜா சத்தியசீலன் மேற்கொண்டிருந்தார்.

# பண்டாரவளையில் கஞ்சா செடிகளை வளர்த்தவர் கைது



பண்டாரவளையில் எல்ல பகுதியில் வீட்டில் மேல் பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகளை வளர்த்தார் என்ற சந்தேகத்தில் விசேட அதிரடிப்படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்ல பகுதியில் நேற்று விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே கஞ்சா செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது . கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்பதோடு, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .

# விமலசுரேந்திர நீர்தேக்கத்து வான் கதவுகள் திறப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

தொடரும் கன மழை காரணமாக நோட்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்தேக்கத்தில் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளமையால் குறித்த நீர் தேக்கத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்ததுடன் நீர்த்தேக்க கரையோர பிரதேசத்தில் இருப்பவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இந்த மழை காரணமாக மவுஸ்ஸாக்கலை, லக்ஷபான, கெனியன், கொத்மலை, மேல் கொத்மலை, நவ லக்ஷபான ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2022/08/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2022/10/26 மற்றும் 2022/10/27 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577
Orient Finance
skills

# தீபாவளி பண்டிகை முற்பணம் ; ரூ.15,000 ஆக அதிகரிக்கவும்



தீபாவளி பண்டிகையை கொண்டாடும் முகமாக, குறைந்தபட்சம்,15,000 ரூபாவேனும் தோட்ட தொழிலாளர்களுக்கு முற்பணமாகக் கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தீபாவளியை கொண்டாடும் பெருந்தோட்ட மக்கள் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசேட கோரிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளியை கொண்டாடும் முகமாக சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்களினால் 5000 ரூபாய் முற் கொடுப்பனவு தொகை சில காலமாக வழங்கப்பட்டு வருவதாகவும், தற்போது நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தொகை போதுமானதாக இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். எனவே, அரசின் தலையீட்டின் பேரில், தீபாவளி பண்டிகையை கொண்டாடும் முகமாக, குறைந்தபட்சம் 15,000 ரூபாவேனும் முற்பணமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# காசல்ரீ நீர்தேக்கத்தின் தானியங்கி வான்கதவுகள் திறப்பு

## களனி ஆற்றின் நீர் மட்டம் உயரும் வாய்ப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

களனி ஆற்றின் பிரதான கிளையாறான கெசல்கமுவ ஓயாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நீர் மின், நீர் தேக்கமான காசல்ரீ நீர்தேக்கம் அதன் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில் அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

இந்த தானியங்கி வான் கதவுகள் வழியாக நேற்றுக் காலை முதல் நீர் வெளியேறி வருகின்றது.

இந்த நீரானது களனி ஆற்றின் நீர் மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதால் காசல்ரீ நீர்தேக்கத்தின் கீழ் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும் இந்த ஆற்றினை பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என நீர் தேக்கத்தின் கடமை நேர பொறியியலாளர் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த பிரதேசத்திற்கு மழை பெய்து வருவதனால் காசல்ரீ நீர் தேக்கத்திற்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்த தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

பெருந்தோட்ட அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

பச்சைத் தேயிலைக் கொழுந்தை கேள்வி முறையின் கீழ் விற்பனை செய்தல் - நவம்பர்/டிசம்பர் / 2022

கேள்வி இல. SLSPC/PL/Green Leaf/November/December/T-203/2022

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி மாத்தளை, பதுளை மற்றும் காலி மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் தோட்டங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்தை இரண்டு மாத காலத்திற்கு விற்பனை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டத்தின் பெயர் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | கடந்த மாதத்தின் பச்சை கொழுந்தின் அளவு |
|---|---|---|---|
| அலகொல்ல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 49505 |
| கொட்டகஹ அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 15935 |
| கல்பிஹில்ல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 55790 |
| கோமர அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 53268 |
| ஹாகல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 35212 |
| ஹெயார்பார்க் அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 22330 |
| ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 26216 |
| கெலேபொக்க அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 105146 |
| வைத்தலாவ அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 15652 |
| ரங்கல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 | 35269 |
| வுட்சைட் அரச தோட்டம் | 5000.00 | 25,000.00 | 3371 |
| விகாரகல அரச தோட்டம் | 5000.00 | 25,000.00 | 1939 |
| வலஹந்துவ அரச தோட்டம் | 5000.00 | 25,000.00 | 779 |

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 5000.00 ரூபாவைச் செலுத்தி 2022-10-10ஆம் திகதி முதல் பன்வில, கல்பிஹில்லயில் அமைந்துள்ள எமது பிரதேச அலுவலகத்திலிருந்து அல்லது 2022-10-20ஆம் திகதி வரை கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வைப்புத் தொகையாக வைப்புச் செய்ய வேண்டிய இயைபுடைய தொகையை ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் பேணப்படும் 046 1002 40000 933 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது ரொக்கப் பணமாக காசாளருக்குச் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை வைப்புப் பற்றுச்சீட்டு சகிதம் கொழும்பு-12, மீராணியா வீதியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-10-20ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும்.

2022-10-20ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் கேள்விகளைத் திறக்கும் குழுவின் முன்னிலையில் இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கொள்வனவாளர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத கேள்விப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, பீசீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு 12.**
**2022-10-04.**

திகதி 03.10.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4897
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,065,470.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 4 6 8 2 4 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,153,324.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3139
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,242,160.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 13 31 46 47
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,196,275.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 206
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,250,640.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 33 44 53 56
விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,775,751.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 927
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,310,940.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 04 07 20 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,332,072.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1352
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,739,260.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 5 6 0 5 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,375,072.00

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1245
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,994,540.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 273,630,070.00
ஆங்கில எழுத்து T சுப்பர் நம்பர் 02 வெற்றி எண்கள் 24 46 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



# வெளிநாட்டுச் செலாவணியை இலகுவில் ஈர்க்க சுற்றுலாத்துறை விருத்தி செய்யப்படும்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

"வெளிநாட்டு செலவாணியை அதிகரிக்கும் முக்கிய துறையான உல்லாசத்துறையை மேம்படுத்த பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே. தெரிவித்தார்.

அறுகம்பையில் நடைபெற்ற உலக சுற்றுலா தின நிகழ்வில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மேம்பாட்டுப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரத்துக்கு சுற்றுலாத்துறை கணிசமான பங்களிப்புச் செய்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு இத்துறையை மேம்படுத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.





வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் உல்லாசத்துறை அபிவிருத்தி செய்யப்படும். இதற்கமைய அங்குள்ள வழிபாட்டுத் தலங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பாசிக்குடாவில் பல அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவதை நான் நேரடியாகக் கண்டேன்.அதேபோன்று கடலலைச் சறுக்கலுக்கு அறுகம்பையில் நல்ல சுவாத்தியங்கள் உள்ளன.இங்கு இத்துறையை விருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். துறைசார் நிபுணர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கடற்கரைப் பிரதேசத்தை துப்புரவு செய்யும் பணியோடு உலக சுற்றுலாதின நிகழ்வுகள் ஆரம்பமாகின. கடற்படையினர் மற்றும் கரையோரப்பாதுகாப்பு, கரையோரவளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.ஊறணி களப்பில் மரநடுகையும் பசுமை சுற்றுலாவை ஊக்குவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், படகுச்சவாரிகளும் இடம்பெற்றன. இதில், சர்வதேச ஊடகவியலாளர்கள் மற்றும் பிரதம விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.

அரசாங்க அதிபர் டக்ளஸ் தலைமையில் உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

## கிழக்கு மாகாண பிரிவேனா விழா

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண பிரிவேனா விழா திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் பிரிவேனா இராஜாங்க அமைச்சர் விஜித பெய்ருகொட தலைமையில் அண்மையில் நடைபெற்றது. "ஒரு பலனளிக்கும் உற்பத்தித்திறன்" என்ற தொனிப்பொருளின் கீழ், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு, கிழக்கு மாகாணத்தில[ள்ள பல விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.புதிய பிரிவேனா மதிப்பீட்டு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் பிரிவேனா கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன்படி, கிழக்கு மாகாணத்தில் பிரிவேனா உற்பத்தித் தரச் சுட்டெண்ணை இலக்காகக் கொண்டு 29 பிரிவேனாக்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டன.

இம்மாகாணத்தில் உள்ள பிரிவேனா மற்றும் தம்ம பாடசாலைகள் பல கடினமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, பிள்ளைகளுக்கு பிரிவெனா கல்வியை வழங்குவதற்கும் பிக்குகளின் கல்விக்காகவும் கடுமையாக உழைத்து வருகின்றன.

## அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அவசர கோரிக்கை

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



நாட்டின் பணவீக்கம் மற்றும் பொருளதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கே. முஹம்மட் கபீர் கோரிக்கை விடுத்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதற்கு நிவாரணமாக அரசாங்க ஊழியர்களுக்கு எந்த சலுகைகளும் வழங்கப்படவில்லை.

விலையேற்றத்தால் மக்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள்நான்கு மடங்கு அதிகரித்துள்ளதால்,மாதாந்த சம்பளம் பெறுவோர் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகியுள்ளர்.

அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் மாதாந்த சம்பளமானது இந்த விலையேற்றங்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாதுள்ளது. தற்போது அரசாங்கம் வழங்கும் சம்பளமானது ஒரு மாதத்திற்கான போக்குவரத்து செலவுக்கே போதுமானதாக உள்ளது. எனவே,இவற்றை கருத்திற்கொண்டு அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

## கல்முனை பிரதேசத்தில் முதியோர், சிறுவர் கௌரவிப்பு

(கல்முனைமத்தியதினகரன்நிருபர்)



உலக சிறுவர்,முதியோர் தினத்தை முன்னிட்டு கல்முனை சமுர்த்தி பிரதேச அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள், கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலிஹ் தலைமையில் சனிக்கிழமை (01) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில், பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டார். நற்பிட்டிமுனை கலந்தர் உம்மா (97வயது) உட்பட கல்முனை நெய்னா முஹம்மது (86வயது), மருதமுனை பி.எம். ஹிசாம் மதார் (73வயது) ஆகிய முதியோர்களுக்கு இவரால் கௌரவம் வழங்கப்பட்டது.மேலும் இந்நிகழ்வில்,கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் மிகவும் குறைந்த வருமானமுள்ள குடும்பத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

## தென்னங்கன்றுகள் விநியோகம்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அருணலு வாழ்வாதார (2021) அபிவிருத்தி உதவி வேலைத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.



பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலின் கீழ் முதலாம் கட்டமாக ஐநூறு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹூசைன் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிருவாக உத்தியோகத்தர் எம். எஸ்.பாறுக், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், வங்கிச்சங்க முகாமையாளர் எம். ஜே.எம்..நிஹ்மதுல்லாஹ், தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.யஜமதி,கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ..முஹாஜீர்,வலய உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினர்.

## பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்பு நிதி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெண்கள் தலமைதாங்கும் 70 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு நிதியும் வீட்டுத்தோட்ட விதைகளும் வழங்கப்பட்டுள்ளதாக,

ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் திங்களன்று (03) இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வைத் துவக்கி வைத்து உரையாற்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா, ஐவெயார் நிறுவனம் காலத்துக்குக் காலம் இப்பிரதேசத்திலுள்ள நலிவுற்ற, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேவைகளை அறிந்து உதவிகளை வழங்கி வருகின்றது. அந்த வகையில், பொருளாதார ரீதியில் நெருக்கடியைச் சந்தித்து ஜீவனோபாயத்திற்கு சிரமப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்காக இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

பெண்களும், கர்ப்பிணித் தாய்மாரும் குழந்தைகளும் போஷாக்கில்லாத நிலைமையை எதிர்கொள்கின்றனர். இதனால், மந்தபோசனையுடைய குழந்தைகள் பிறக்கின்றன. இன்னுமின்னும் போஷாக்கற்ற குழந்தைகள் பிறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த அடிப்படையிலே பெண்களுடைய ஆரோக்கியத்தையும் அவர்களுடைய போசாக்குத் தேவையையும் நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு, நம் எல்லோருக்கும் உண்டு.

அதனாலேயே, நஞ்சற்ற உணவு, சுயசார்புப் பொருளாதாரம் என்ற அடிப்படையில் இந்த வேலைத்திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

உணவுப் பொதிகள் வழங்குவதில் தொடங்கிய நமது பணி இப்பொழுது சுயமாக, அவர்களாகவே உற்பத்தி செய்து தங்களது போஷாக்கு, பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அளவுக்கு திட்டம் வகுத்துச் செயற்படுகின்றோம்.

ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் இது அமுலாக்கப்படுகின்றது. இந்த ஆசிய மன்றம் இலங்கையில் 15 மாவட்டங்களைத் தெரிவுசெய்து வீட்டுத் தோட்டங்கள், சுய உணவுப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட விடயங்களில் பெண்களை வலுவூட்டும் திட்டங்களை அமுலாக்கி வருகின்றது.

காத்தான்குடியில் இடநெருக்கடி காரணமாக அவஸ்தைப்படும் நிலைமை இருந்தபோதிலும், நவீன சிந்தனையோட்டத்தில் இட நெருக்கடியுள்ள இடங்களிலும் விவசாயத்தை மேற்கொள்ளலாம் என்ற மாற்றுத்திட்டம் நீரூபிக்கப்பட்டுள்ளது. அதனையே நாம் இங்கு தொடங்கவுள்ளோம்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் 70 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் பயிர் விதைகளும் வழங்கப்பட்டன. இவர்களுக்கு ஏற்கெனவே, எவ்வாறு வீட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள்வது என்பது பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்."

## திருமலை மாவட்ட செயலகத்தில் வாணி விழா

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா நிகழ்வுகள் நேற்று (04) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவின் தலைமையில் நடைபெற்றது.

பூஜை வழிபாடுகளை, திருகோணமலை இரத்தினசிங்க பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு பாலகிருஷ்ண குருக்கள் நிகழ்த்தினார்.

சரஸ்வதி பூஜை வழிபாடுகளை மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடாத்த நடவடிக்கை எடுத்தமைக்காக ஏற்பாட்டுக்குழுவினருக்கு நன்றிகளை தெரிவிப்பதாக, அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

இப்பூஜை வழிபாடுகள் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு புறம்பாக வேறு பிரதேசங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்துக்களின் மிகப்பிரதான சமய நிகழ்வுகளுள் ஒன்றாக இப்பூஜை காணப்படுகின்றது. இப்பூஜை வழிபாடுகள் மூலம் வேண்டப்படும் விடயங்கள் மக்கள் வாழ்விலும் நாட்டுக்கும் நலனாய் அமைய வேண்டுவதாக இதன் போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

வரவேற்பு நடனம் உட்பட பல நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டன. திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலய மாணவிகள் இவ்வரவேற்பு நடனங்களை நிகழ்த்தினர். நடனங்களில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், கிளைத்தலைவர்கள் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் சிறுவர் தின சிறப்பு நிகழ்வுகள்

(சாய்ந்தமருது விஷேட நிருபர்)

உலக சிறுவர் தினத்தையொட்டி கல்முனை கல்வி வலய கமு/ இஸ்லாமபாத் முஸ்லிம் வித்தியாலய மாணவர்களின் சிறப்பு நிகழ்வுகளும், விழிப்புணர்வு ஊர்வலமும் நேற்று (04) பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிஷாத் தலைமையில் இடம் பெற்றன.

இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக பார்ட்னர்ஸ் போ சேன்ஜ் இன்டெர் நெஷனலின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் றிசாத் செரீப் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் நிருவாக உத்தியோகத்தர் எம். இராமக்குட்டி , கல்முனைப் பொலிஸ் நிலையப் பிரதானபொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட், மற்றும் விஷேட அதிதியாக கல்முனை பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். சாஜித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் போஷாக்கு, பாதுகாப்பு, துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்வலமும், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வு



(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

பகுதித் தலைவர் எம்.ஐ.ஜௌபரின் நெறிப்படுத்தலின் கீழ் ஆரம்பபிரிவு அதிபர் ஓ.எல்.எம். றிஸ்வான் தலைமையில் இந்நிகழ்வு (03) நடைபெற்றது. இச்சிறுவர் தின நிகழ்வில் அதிபர் ஏ.சீ.நியாஸ், பிரதி அதிபர்களான ஏ.கே.அனீஸ், எம்.ஏ.சுகைறா ஆகியோர் பிரதம அதிதியாகவும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# கௌரவமான அரசியல் தீர்வை கோரி மடுவில் கவனயீர்ப்பு போராட்டம்

மன்னார் குறுப் நிருபர்




வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரி இடம்பெற்றுவரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் 65 நாட்களை எட்டியுள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை (4) காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் கலந்துகொண்டதுடன்,குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-10-20ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 2500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி சுங்கத் திணைக்களத்தின் 06ஆம் மாடியிலுள்ள சேவை மற்றும் வழங்கல் பிரிவிற்கு எழுத்து மூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளலாம். சகல விலைமனுக்களும் 100,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்),**
**சேவை மற்றும் வழங்கல் பிரிவு,**
**6ஆம் மாடி, இலங்கைச் சுங்கம்,**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு-11**

5. விலைக்கோரலைக் கையளித்தல் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள சிறியளவிலான பெறுகைக் குழு,**
**இலங்கைச் சுங்கம்,**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு - 11.**
**தொலைபேசி இல. 011-2221680**
**தொலைநகல்: 011-2436096**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கையின் அதிவேகநெடுஞ்சாலையின் வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது**

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**EOM&M** பிரிவிற்காக **Reflective and Overlay Stickers** ஐ வழங்குவதற்கான அழைப்பு

ஒப்பந்த இல.: **RDA/EOM&M/PRC/2022/MNT/16**

1. RDA/EOM/&M/PRC/2022/MNT/16 என்ற ஒப்பந்த இலக்கத்தின் கீழ் மேலேயுள்ள ஒப்பந்தத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக EOM&M பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து விலைமனுக்களும் 50,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் கொள்வனவுப் பிரிவிலிருந்து பெறலாம் (தொலைபேசி: 038-22 89122. தொலைநகல்: 038-22 89560) மற்றும் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
3. 2022.10.05 ஆம் திகதியிலிருந்து 2022.10.25 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 1500 ரூபா மற்றும் வெட்வரி ஆகியவற்றை செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவிற்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெற்றுக் கொள்ள முடியும்.
4. 2022.10.26 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்னராக பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவிற்கான பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைமனுவின் செல்லுபடியாகும் கால எல்லை 2023.01.25 ஆம் திகதி வரை இருத்தல் வேண்டும்.
6. ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.02.22 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
**EOM&M** பிரிவின் பெறுகைக் குழு,
பணிப்பாளர் (**EOM&M** பிரிவு) மே/பா.,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம

---

## பதவி வெற்றிடங்கள்

**நீர்ப்பாசன அமைச்சு**

**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அனுகுமுறை (CResMPA)**

**செயற்றிட்ட பொறியியலாளரின் ஆட்சேர்ப்பு (பெறுகை)**

### ஐந்து வருட காலப்பகுதிக்கான செயற்றிட்டம் (2022 — 2026)

காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையானது உலக வங்கியின் நிதியிடல் ஆதரவின் கீழ் உலக வங்கியினால் நிதியிடப்பட்டு நீர்ப்பாசன அமைச்சினால் அமுல் நடாத்தப்படுகின்றது. வெள்ளம் மற்றும் வடிகாலமைப்பு அபாயங்களினால் நாட்டிலுள்ள இலகுவாக பாதிப்படையக்கூடிய மக்கள் மற்றும் ஆதனங்களை பாதுகாப்பதற்கான காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதை உறுதிப்படுத்துவதற்கான முதன்மையான தேசிய அபிவிருத்தி செயற்றிட்டமாகும். இந்த செயற்றிட்டத்தின் இலக்கானது மேம்படுத்தப்பட்ட காலநிலை மற்றும் காலநிலை எதிர்வுகூறல் மற்றும் குறித்த காலத்திற்கு முன்னரான அபாய எச்சரிக்கை அத்துடன் களனி ஆற்றுப்படுக்கையின் கீழ் மட்டத்தில் வெள்ள அபாயங்களை குறைப்பதற்காக அரசாங்கத்தின் ஆற்றலை அதிகரிப்பதாகும். இந்த செயற்றிட்டமானது 2021 இலிருந்து 2026 வரை செயற்படுத்தப்படும்.

முழுநேர ''ஒப்பந்த அடிப்படையில்'' பணியாற்றுவதற்காக காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையின் செயற்றிட்ட ஒருங்கிணைத்தல் பணிமனையிலுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

### செயற்றிட்ட பொறியியலாளர் (பெறுகை) – (பிஎஸ்4) – 01 பதவி வெற்றிடம்

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**கீழேயுள்ள I அல்லது II இற்கானது**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டப் படிப்பு

அல்லது

உரித்தான துறையில் பெற்றுக் கொண்ட பட்டப் படிப்பிற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று. உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

அல்லது

சிவில் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.

அத்துடன்

பெறுகைத் துறையில் ஆகக் குறைந்தது 7 வருடபட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

II. உரித்தானதுறையில் நாடளாவிய ரீதியிலான அரசாங்க சேவைகளின் III/II ஆம் வகுப்பு அல்லது மேற்பட்ட அல்லது நிகரான நிலபரத்தையுடைய அலுவலகரொருவர்.

அத்துடன்

பெறுகைத் துறையில் ஆகக் குறைந்தது 7 வருடபட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**பணியின் சுயவிவரம்/ பிரதானபொறுப்புக்கள்:**

I. வேலைகள் மற்றும் பண்டங்கள் ஒப்பந்தங்களுக்கான ICB பெறுகைகளை கையாளுதல் உசாத்துணையாளர்களை நியமிப்பதற்கான ICB பெறுகைகள்

II. உலக வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட நியமமாக்கப்பட்ட பெறுகை ஆவணங்கள் மற்றும் நிர்மாண கைத்தொழில்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் பிரசுரிக்கப்பட்ட நியமமாக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுக்கமைவாக விலைமனுக்கோரல் ஆவணங்களை தயாரித்தல்.

III. சர்வதேச உசாத்துணையாளர்களை நியமிப்பதற்காக உலக வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட SRFPs இன் பிரகாரம் ஆர்வவெளிப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளுக்கான தேவைப்பாடு ஆகியவற்றை தயாரித்தல்.

IV. உலகவங்கி பெறுகை ஒழுங்குவிதிகள், இலங்கை அரசாங்கத்தினால் பணிகள், பண்டங்கள் மற்றும் உசாத்துணையற்ற சேவைகள் ஆகியவற்றிற்காக பிரசுரிக்கப்பட்ட கையேடு மற்றும் வழிகாட்டி அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்பட்ட உசாத்துணை வழிகாட்டி மற்றும் கையேடுகள்.

**சம்பள மட்டம்: பிஎஸ் 4 (வகுதி ஏ) – 115,000 – 130,000 ரூபா (01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமானது)**

**பொதுவான நிபந்தனைகள்:**

1. வயது: விண்ணப்பதாரிகள் 21 வயதை பூர்த்தி செய்தவர்களாகவும் 62 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல் ஆகாது.
2. சம்பள அளவுத்திட்டம்: 01/2019 என்ற இலக்கமும் 2019.03.15 என்ற திகதியையுமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 03/2016 என்ற இலக்கமும் 2016.02.25 ஆம் திகதியுமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் மற்றும் படிகள்.
3. உரித்தான விடயப்பரப்பில் உலகவங்கி/ வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் ஆகக் குறைந்தது 5 வருட வேலை அனுபவம்.
4. இந்த பதவியானது முற்றுமுழுதாக ஒப்பந்த அடிப்படையில் அமைவதுடன் ஆரம்பத்தில் 1 வருட கால எல்லைக்கும் அதன் பின்னர் செயற்பாட்டு அடிப்படையில் அனுகூலமான நீடிப்புக்களுடன் அமைந்திருக்கும்.
5. **விண்ணப்பங்களை அனுப்பும் முறைமை:**

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை சுயதரவுடன் கல்விசார், தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அதியுயர் தகைமைகள் மற்றும் அனுபவத்துடனுள்ள தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். அடிப்படை தகைமையை சான்றுபகருவதற்கான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்துவதற்கான பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எவ்வகையிலுமான ஆதரவை பெறுவது தகுதியிழப்பிற்கு வழி வகுக்கும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2022 ஒக்ரோபர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளர், காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை, இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**திகதி:**

---

**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**

## பெறுகை அறிவித்தல்

### 2023ஆம் ஆண்டிற்காக இறைச்சிக்கடை/ வாரசந்தை/ தினச் சந்த மற்றும் கட்டுநாயக்க பொதுச் சந்தை அருகில் கடை அறைகள், வர்த்தக உரிமையை குத்தகைக்கு வீடல்

01. 2023.01.01 முதல் 2023.12.31 வரை இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் இறைச்சிக்கடை, சந்தை மற்றும் கட்டுநாயக்க பொதுச் சந்தை அருகில் கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த விண்ணப்பங்களை 2022.10.19 மு.ப. 3.00 வரை தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்த பின்பு இவ் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2022.10.20 பி.ப. 2.00 வரை என்னால் ஏற்கப்படும்.

02. கேள்விகள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அக்கேள்விப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக பொறியிட்டு இரு கடித உறைகளையும் ஒரு உறையில் இட்டு **'தலைவர், கட்டுநாயக்க சீதுவ நகர சபை, சீதுவ** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் தம்மால் விண்ணப்பிக்கும் கேள்வி உருப்படி பற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. விலைமனுக்கள் திறத்தல் 2022.10.20 பி.ப. 2.15 இற்கு நகர சபை அலுவலகத்தில் இடம் பெறுவதுடன் விண்ணப்பதாரிக்கு அல்லது விண்ணப்பதாரி சார்பாக அவரது எழுத்துமூல அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

04. அங்கீகரிக்கப்பட்ட குத்தகைதாரர்களால் விலைமனுக்களில் குறிப்பிடப்படும் தொகையில் நான்கில் ஒன்று (1/4) எழுத்துமூல அறிவித்தல் விடுத்து 07 நாட்களுக்குள் இவ் அலுவலகத்திற்கு காசாக வைப்புச் செய்து குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு வரல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறும் குத்தகைதாரரின் விலைமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் குறித்த வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

05. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் ஏதேனும் விலைமனுக்கள் அல்லது சகல விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபைக்கு உரியது. கடந்த ஆண்டுகளில் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நபர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. மேலும் விலைமனு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு விலைமனுக்களை சமர்ப்பிக்காத நபர்களின் குறித்த வைப்புத் தொகையும் சபைக்கு உரியதாக்கப்படும்.

06. தாம் விண்ணப்பிக்கும் தொகைக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட குத்தகைதாரர்கள் அத்தொகையுடன் சம்பந்தப்பட்ட முத்திரைக் கட்டணத் தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அலுவலக நேரங்களில் விசாரித்து அறியலாம்.

**தொ.பே.இல. 011-2253575**
**2022.10.04**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**
**சீதுவ.**

**டி.கே. சமித் நிஷாந்த பெர்னான்டோ**
**தலைவர்,**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**

| தொடர் இல | கேள்வியின் தன்மை | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் | 2023ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | கட்டுநாயக்க பொதுச் சந்தை மாட்டிறைச்சி கடை வர்த்தக உரிமையைப் குத்தகைக்கு விடல் | ரூ. 3000.00 | ரூ. 250.00 | ரூ. 132,650.00 |
| 2 | முகலங்கமுவ ஞாயிறு சந்தை வளாகத்தின் மாட்டிறைச்சிக் கடை வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ. 3000.00 | ரூ. 250.00 | ரூ. 200,500.00 |
| 3 | முகலங்கமுவ ஞாயிறு வார சந்தை வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ. 5000.00 | ரூ. 250.00 | ரூ. 865,500.00 |
| 4 | சீதுவ வியாழக்கிழமை வார சந்தை வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ. 5000.00 | ரூ. 250.00 | ரூ. 748,500.00 |
| 5 | எவரிவத்த தினச் சந்தை வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ. 10,000.00 | ரூ. 250.00 | ரூ. 3,717,300.00 |
| 6 | கட்டுநாயக்க பொதுச் சந்தை அருகில் கடை அறை இல. 01 | ரூ. 3000.00 | ரூ. 250.00 | ரூ. 15,000.00 (மாதாந்தம்) |
| 7 | கட்டுநாயக்க பொதச் சந்தை அருகில் கடை அறை இல. 02 | ரூ. 3000.00 | ரூ. 250.00 | ரூ. 15,000.00 (மாதாந்தம்) |

**2022.10.04**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**
**சீதுவ.**

**டி.கே. சமித் நிஷாந்த பெர்னான்டோ**
**தலைவர்**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை**

## மீட்கப்படாத அடகுத் தங்க ஆபரண ஏலவிற்பனை

**வரையறுக்கப்பட்ட கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான**

- கிரிஎல்ல
- எருபொல
- தெற்கு கரந்தன
- எல்லகாவ
- கீணகஹவில

எனும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2019-06-01ஆம் திகதி முதல் 2021-04-30ஆம் திகதி வரை அடகு வைத்து 2022-10-23ஆம் திகதி மு.ப. 9.30 மணி வரை மீட்கப்படாத அடகுத் தங்க ஆபரணங்களை 2022-10-23ஆம் திகதி மு.ப. 09.30 மணி முதல் வரையறுக்கப்பட்ட கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**

**வரையறுக்கப்பட்ட கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**இடங்கொட,**
**கிரிஎல்ல.**
**தொலைபேசி: 045-2265808**
**மின்னஞ்சல்: mpcskiriella123@gmail.com**

## மாஹோ பிரதேச சபையின் 2023 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**மக்கள் பார்வையிடலுக்கான வாய்ப்பு வழங்குதல்**

மாஹோ பிரதேச சபையின் 2023 ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்டம் 2022 ஒக்டோபர் 07 முதல் 2022 ஒக்டோபர் 17 வரை (அரச விடுமுறை தினம் மற்றும் ஞாயிறு தவிர்ந்து) அலுவலக நேரங்களில் மாஹோ பிரதேச சபை தலைமையகத்தில் பொது மக்களின் பார்வையிடலுக்காக வைக்கப் பட்டுள்ளதாக பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிகளின் 10.2(ஆ) விதியின் பிரகாரம் பிரதேசத்தின் பொது மக்களிடம் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**எச்.எம். விஜித்த அமுனுகம**
**தலைவர்**
**மாஹோ பிரதேச சபை**

## பெறுகை அறிவித்தல்

**வீதி அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு**

**மத்திய மாகாணம்**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை - மத்திய மாகாணம்**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நிர்மாணிக்கப்படும் கம்பளை நான்கு மாடி வர்த்தக கட்டிடத்தின் மற்றும் அம்பதென்ன வாகன சேவை நிலையத்தில் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக விலைமனுக் கோரல் அறிவித்தல்**

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களை கம்பளை நான்கு மாடி வியாபாரக் கட்டிடம் மற்றும் அம்பதென்ன சேவை நிலையத்தில் கீழ்க்காணும் சேவைகளுக்காக அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மின் உயர்த்தி அமைப்பை ஸ்தாபித்தல் - கம்பளை நான்கு மாடி வர்த்தக கட்டிடம்.

கம்பளையில் நிர்மாணிப்பில் உள்ள நான்குமாடி வர்த்தக கட்டிடத்திற்காக மின் உயர்த்தி அமைப்புக்கள் 02 பொருத்துவதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அவ் மின்சார உயர்த்தி அமைப்புக்கள் இரண்டின் மாதிரிகள் இவ் அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக 05 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) 2022.10.27 முதல் 2023.02.26 வரை | |
|---|---|---|---|
| | | காசாக (ரூ) | வங்கிப் பிணை (ரூ) |
| 01. | 400 கிலோகிராம் கொள்ளவுடைய 05 பேரை கொண்டு செல்லக்கூடிய 02 மின் உயர்த்திகளை வழங்கிப் பொருத்துதல் | 81,000.00 | 162,000.00 |

2. மின் அமைப்பை ஸ்தாபித்தல் - கம்பளை நான்கு மாடி வர்த்தக கட்டிடம்

இக்கட்டிடத்தின் உள்ளக ஸ்தல மின் வயரிங் (Point Wiring) மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் Penel Board மற்றும் Distribution Board ஏனைய துணைப்பாகங்களை வழங்கிப் பொருத்தி மின் வழங்கலை ஏற்படுத்தி பரிசீலனை விடயங்களை மேற்கொள்வதற்காக 05 வருடத்திற்கு குறையாத அனுபவம் உள்ள ஒப்பந்த நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. மின் அமைப்பை ஸ்தாபித்தல் பற்றிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) EM4 அல்லது அதற்கு மேற்பட்ட வகுதியில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) 2022.10.27 முதல் 2023.02.26 வரை | |
|---|---|---|---|
| | | காசாக (ரூ) | வங்கிப் பிணை (ரூ) |
| 01. | Penel Board உடன் மின்சார அமைப்பை ஸ்தாபித்தல் | 40,500.00 | 81,000.00 |

03. CCTV கெமரா அமைப்பை ஸ்தாபித்தல் - கம்பளை நான்கு மாடி வர்த்தக கட்டிடம்

இக் கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக வீட்டு நிர்மாண வரைப்படம் மற்றும் மாதிரிகளுக்கு அமைவாக CCTV கெமரா அமைப்பை பெருத்துவதற்கு அத்துறையில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ள நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) 2022.10.27 முதல் 2023.02.26 வரை | |
|---|---|---|---|
| | | காசாக (ரூ) | வங்கிப் பிணை (ரூ) |
| 01. | CCTV கெமரா அமைப்பை ஸ்தாபித்தல | 10,500.00 | 21,000.00 |

04. ஜெனரேட்டர் ஒன்றை கொள்வனவு செய்தல் - அம்பதென்ன வாகன சேவை நிலையம்.

அம்பதென்ன வாகன சேவை நிலையத்திற்காக 85KVA கொள்ளவு உடைய ஜெனரேட்டரொன்றை சகல துணைப்பாகங்களுடன் வழங்கிப் பொருத்துதல் மற்றும் இணைப்பை வழங்குவதற்காக தகைமையுடனான நிறுவனங்களிலிருந்து விலைமனுகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) 2022.10.27 முதல் 2023.02.26 வரை | |
|---|---|---|---|
| | | காசாக (ரூ) | வங்கிப் பிணை (ரூ) |
| 01. | 85KVA வலுவுடைய ஜெனரேட்டரொன்றை வழங்கி பொருத்துதல் | 65,000.00 | 130,000.00 |

05. வாகன உயர்த்திகள் (Hoister) 04ஐ கொள்வனவு செய்தல் - அம்பதென்ன வாகன சேவை நிலையம்

அம்பதென்ன வாகன சேவை நிலையத்தில் பொருத்துவதற்காக 04 வாகன உயர்த்திகளை (Hoister) கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாக வழங்கிப் பொருத்துவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்) 2022.10.27 முதல் 2023.02.26 வரை | |
|---|---|---|---|
| | | காசாக (ரூ) | வங்கிப் பிணை (ரூ) |
| 01. | 04 தொன் தனி தூண் ஹைட்ரெலிக் உயர்த்தி 01 | 80,000.00 | 160,000 |
| 02. | 16 தொன் 02 தூண் ஹைடரொலிக் உயர்த்தி 01 | | |
| 03. | 04 தொன் 02 தூண் சேர்விஸ் உயர்த்தி 02 - (Floor type Service Lift) வழங்குதல் மற்றும் பொருத்துதல் | | |

i. மேற்படி ஒவ்வொரு வேலைக்கும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி மாதிரிப் பத்திரங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அதற்காக உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்படின் குறித்த உருப்படி மற்றும் உங்களது மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு, வேண்டுதல் கடித மொன்றை 2022.10.26ம் திகதிக்கு முன் Prdatender@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துக்கொள்கிறேன்.

ii. உங்களால் விண்ணப்பிக்கும் உருப்படி பற்றிய தகவல்களை வேண்டுதல் கடிதத்தில் சரியாக மற்றும் தெளிவாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் தகவல்கள் பிழையாக இருப்பின், பூர்த்தியற்று இருப்பின் உங்களால் சமர்ப்பிக்கப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்து உங்களது வேண்டுதல் கடிதம் நிராகரிக்கப்படும்.

iii. மின்னஞ்சல் மூலம் வேண்டுதல் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் 2022.10.26 பி.ப. 12.30 இற்கு முடிவடைவதுடன் வேண்டுதல் கடிதங்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்த நிறுவனங்களுக்கு மட்டும் 2022.10.07 முதல் 2022.10.26 வரை அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப் பத்திரங்களை, கேள்விதாரரால் வேண்டுதல் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

iv. குறித்த உருப்படியில் முன்னால் தரப்பட்டுள்ள குறித்த பெறுமதியுடைய கேள்விப் பிணையை பொது முகாமையாளர் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது மக்கள் வங்கியின் கணக்கு இலக்கம் 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு செலுத்திய பற்றுச் சீட்டு அல்லது அரசு அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

v. 2022.10.17 மு.ப. 10.30 இற்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் நாட்டில் காணப்படும் சீரற்ற நிலைமை காரணமாக ZOOM தொழில் நுட்பத்தின் மூலம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக கலந்துகொள்வதற்கு தேவையான தகவல்கள் கீழ்க்காணுமாறு அமையும்.

- Meeting ID : 2087855285
- Passcode: PRDA/2022
- Jon Meeting: https://us02web.zoom.us/j/2087855285?pwd=ci9QMWxMZ3RDUDFsN1/xa3RKbmZmZz09.

vi. இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியென வேறுவேறு கடித உறைகளில் இடப்பட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும் அத்துடன், இடதுபக்க மேல் மூலையில் குறித்த கேள்விப் பத்திரத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2022.10.27ம் திகதி மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்த, போகம்பர, கண்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும். குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

vii. ஒப்பந்தங்கள் வழங்கும் போது நிதி அமைச்சினால் விநியோகிக்கப்படும் ஒப்பந்தங்கள் வழங்குவதற்கான சுற்றுநிருபங்களுக்கு அமைவான விதிமுறைகள் பெறுகை விடயங்களுக்கு பொருந்துமாறு மேற்கொள்ளப்படும். கேள்வி ஆவணங்களுடன் உங்களினால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாக மற்றும் கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுருத்தல்களுக்கு அமைவாக சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் அத்துடன் குறித்த தகவல்களை சரியாக சமர்ப்பிக்காமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகும். எந்த கேள்விப் பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் குறைந்த பட்ச விலை குறிப்பிடப்படும் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்ற இனக்கப்பாடும் கிடையாது.

viii. மேலதிக விபரங்களை மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 இற்கு இடையில் அலுவலக நாட்களில் தொ.பே. 081-2052308/ 081-2052436/ 081-2052279/ 081-2204378 மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிலைய பிரதம பொறியியலாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இல. 09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்தை,**
**போகம்பர, கண்டி.**

**மாநகர சபை - கடுவளை**

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2023ஆம் வருடம்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டும் கடுவளை மாநகர சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், வியாபார நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள், வியாபாரிகளிடமிருந்து 2022-11-05ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| (1) வழங்கல் விடய இல. | பொருட்களின் விபரம் |
|---|---|
| G1 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அலுவலக பாவனைப் பொருட்கள் (பேனை, பென்சில் உட்பட காகிதாதிகள்) |
| G2 | அலுவலக உபகரணங்கள் - மரம், உருக்கு, பிளாஸ்டிக் (மேசை, கதிரை, அலுமாரி போன்றன) |
| G3 | அலுவலக மின்சார உபகரணங்கள் (மின் விசிறிகள் மற்றும் மின் கேத்தல்கள் போன்றன) |
| G4 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (முச்சக்கர வண்டி, டிராக்டர், JCB, டபள் கெப், லொறி போன்றன) |
| G5 | சகல வகையான வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் டேப் |
| G6 | கணனி இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கணனி அச்சுப் பொறிகள் போன்றன |
| G7 | வயர், சுவிட்ச், பல்ப், பிளக் டொப், ஹோல்டர் உட்பட ஏனைய மின்சார துணைப்பாகங்கள் |
| G8 | தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகைகள், துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்கள் மற்றும் பீடை நாசினிகள் |
| G9 | மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் (ஆயுர்வேதம் மற்றும் விலங்கு மருந்துகள்) |
| G10 | கிருமிநாசினித் திரவங்கள், முகக்கவசங்கள், கையுறைகள் |
| G11 | அலுவலக திரைச்சீலைகளைப் பொருத்துதல் மற்றும் தரை விரிப்புகளை இடுதல் |
| G12 | வளிச்சீராக்கி இயந்திரங்கள் |
| G13 | பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜீ.ஐ. குழாய்கள், ஆணி வகைகள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்) |
| G14 | தீயணைப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் சேவை நடவடிக்கைகள் |
| G15 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை வழங்குதல் |
| G16 | மின்பிறப்பாக்கி, புல் வெட்டும் இயந்திரம், வளிச்சீராக்கி மற்றும் நீர்ப் பம்பிகளைக் கொள்வனவு செய்தல் |
| G17 | பை வகைகள் (Bags, Briefcase) |
| G18 | குடிநீர் போத்தல்கள் |
| G19 | பீங்கான் கோப்பை உட்பட மட்பாண்ட உள்நாட்டு உற்பத்திகள் |
| G20 | கணனி அச்சுப்பொறி சார்ந்த பொருட்கள் (டோனர், மை, மாஸ்டர் ரோல், ரிபன் போன்றன) |
| G21 | கணனி துணைப்பாகங்கள் (Virus Guard, Pen Drive, UPS) மற்றும் வலையமைப்பு துணைப்பாகங்கள் |
| G22 | கட்டிடப் பொருட்களை வழங்குதல் (கல், மண், களிமண், செங்கல்) |
| G23 | மரங்கள் வழங்குதல் (பலகைகள், தீராந்திகள், ரீப்பைகள்) |
| G24 | நீர்க்குழாய் உபகரணங்கள் வழங்குதல் |
| G25 | பொலித்தீன், அச்சடிக்கப்பட்ட பொலித்தீன் உறைகள் மற்றும் பசளை உறைகள், (பொலிசெக் உறைகள்) வழங்குதல் |
| G26 | கண்ணாடி மற்றும் கண்ணாடிப் பொருட்கள் |
| G27 | ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், கொங்கிறீட் சார்ந்த பொருட்கள் மற்றும் கொங்கிறீட் கொம்போஸ்ட் பீப்பாய்களை வழங்குதல் |
| G28 | சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள், கேட்டரிங் சேவைகள் மற்றும் சமைத்த உணவுகளை வழங்குதல் |
| G29 | பெட்டறிகள் வழங்குதல் |
| G30 | எரிவாயு மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் வழங்குதல் |
| G31 | கோலாஸ் மற்றும் தார் வழங்குதல் |

| (2) வழங்கல் விடய இல. | சேவை விபரங்கள் |
|---|---|
| S1 | உள்ளக தொலைபேசி முறைமைகளை பராமரித்தல் |
| S2 | CCTV கமரா முறைமையை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| S3 | வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல |
| S4 | வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் |
| S5 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| S6 | தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் சேவை நடவடிக்கைகள் |
| S7 | சகல வகை வாகனங்களின் திருத்தவேலைகள் |
| S8 | கணனி இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், அச்சுப் பொறிகள் உட்பட இயந்திர வகைகள், ஏனைய மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் |
| S9 | மரம் மற்றும் மரக் கிளைகளை வெட்டுதல் |
| S10 | கட்டிட வடிவமைப்பிற்கான ஆலோசனை, அளவு மதிப்பீட்டுச் சேவை, காணிகளை அளத்தல் |
| S11 | கடிதத் தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகளை அச்சிடுதல், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அச்சிடல், பெயர்ப் பலகைகள், இறப்பர் முத்திரைகள் மற்றும் திகதி முத்திரைகளைத் தயாரித்தல் |
| S12 | தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் - மென்பொருள் அபிவிருத்தி |
| S13 | பட்டறை வேலைகள், உருக்கியொட்டும் வேலைகள் |
| S14 | சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் 20 இலட்சம் ரூபா வரை |

(3) வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்

- வழங்குநர்கள் பதிவு செய்து கொள்வதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   a) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதி
   b) நிறுவனப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதி
   c) கூட்டுத்தாபனமொன்றானால் கூட்டுத்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்டதற்காக வழங்கப்படும் சான்றிதழ்
   d) வெட் வரிக்காக நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்தச் சான்றிதழை இணைத்தல் வேண்டும் என்பதுடன் அது 2023-01-01ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

- கேட்கப்பட்டுள்ள ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்காமை வழங்குநராக பதிவு செய்து கொள்ளப்படாமைக்கு காரணமாகலாம்.

2) ஒவ்வொரு விடயத்திற்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து விண்ணப்பங்களின் பொருட்டும் 2500.00 ரூபா + (அரச வரிகள் உட்பட) அறவிடப்படும் என்பதுடன் அத்தொகையை மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது ''மாநகர ஆணையாளர், கடுவளை மாநகர சபை, கடுவளை'' மூலம் கொடுப்பனவைச் செய்து, இயைபுடைய காசோலையின்/பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

3) இந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023ஆம் வருடத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும். பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்றாலும் ஏனையவர்களிடம் விலைகளைக் கோரி அதன் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை கடுவளை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

4) வழங்குநர்களுக்கு முற்பணம் வழங்கப்படமாட்டாது.

5) விபரக்குறிப்புகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக வழங்கல் / சேவைகளை திருப்திகரமான வகையில் வழங்கியதன் பின், வழங்குநர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். ஏதாவது கட்டளைகள் வழங்கப்பட்ட பின் 60 நாட்களுக்கான கொடுப்பனவுக் காலம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய வழங்கலுக்காக ஏற்படும் போக்குவரத்து போன்ற மேலதிக செலவுகள் ஏற்படுமானால் அதை வழங்குநரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

6) சபையினால் உங்கள் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டால், எங்களால் அனுப்பப்படும் விலைகள் விசாரணைக்கு பதிலளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு 03 முறை பதிலளிக்கத் தவறினால அது உங்கள் நிறுவனத்தை பதிவு வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதற்குக் காரணமாகலாம்.

7) இதனையொத்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் ஆற்றலில் மூன்று (03) வருட அனுபவம் உள்ளமைக்கான ஆவணச் சான்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சிவில் வேலைகளுக்காக பதிவு செய்து கொள்வதற்கு ICTAD/ CIDA நிறுவத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும் என்பதுடன் அது 2022-01-01ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

இதன் பொருட்டு ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை http//www.mckaduwela@gmail.com இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அதற்குரித்தான ஆவணங்கள் என்பவற்றை 2022-11-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023'' எனக் குறிப்பிட்டு ''மாநகர ஆணையாளர், கடுவளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி நாளுக்குப் பின்னர் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 0112-539562 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**தில்ருக்ஷி கமகே,**
**மாநகர ஆணையாளர்.**
**2022-10-04ஆம் திகதி,**
**கடுவளை மாநகர சபை அலுவலகத்தில்.**

# தாய்லாந்தை வீழ்த்திய இலங்கை மகளிர் அணி



மகளிர் ஆசிய கிண்ணத் தொடரில் தாய்லாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பங்களாதேஷின் சில்ஹட்டில் நேற்று (04) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீராங்கனை ஹார்ஷிதா சமரவிக்ரம 69 பந்துகளில் 81 ஓட்டங்களை பெற்றார்.

பதிலெடுத்தாடிய தாய்லாந்து 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 107 ஓட்டங்களையே எடுத்தது.

தாய்லாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டம் சார்பில் அதிகபட்சமாக சனிதா சுத்திருவாங்க் 42 பந்துகளில் 3 பௌண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மறுமுனையில் இலங்கை மகளிர் அணியின் பந்துவீச்சுக்காக அச்சினி குலசூரிய 2 விக்கெட்டுகளை கைப்பற்றி தனது தரப்பு வெற்றியினை உறுதி செய்திருந்தார்.

இந்த வெற்றியுடன் இலங்கை இதுவரை ஆடிய மூன்று போட்டிகளில் இரண்டில் வென்று 3ஆம் இடத்திற்கு முன்னேறியது. இலங்கை முன்னதாக நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் தோல்வியை சந்தித்ததோடு ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் இலகு வெற்றியீட்டியது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஆசியக் கிண்ணத் தொடரில் தனது அடுத்த போட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை (08) மலேசிய வீராங்கனைகளை எதிர்கொள்ளவுள்ளது.

# தேசிய தெரிவுக் குழுவில் சனத் ஜயசூரிய இணைப்பு



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான இந்த தெரிவுக் குழுவுக்கு ஏழு ஊறுப்பினர்களை விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார். இதில் தேசிய ஒலிம்பிக் குழு செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் பிரசன்ன சன்தித்தும் இடம்பெற்றுள்ளனர்.

# தென்கிழக்கு பல்கலையில் சர்வதேச கராத்தே போட்டி



மாளிகைக்காடு குறூப் நிருபர்

திறந்த சர்வதேச கராத்தே சம்பியன்சிப் போட்டிகள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உள்ளக அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது. தென்கிழக்கு பல்கலைக்கழக கராத்தே போதனாசிரியரும் சர்வதேச மாசியல் ஆட் ஐ.எம்.ஏ சம்மேளனத்தின் பிரதம போதனாசிரியருமான ஏ.ஆர். முஹம்மது இக்பால் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆறு வயது தொடக்கம் 13 வயது வரையான சப் ஜூனியர் மற்றும் கடெட், ஜூனியர், சீனியர் என அனைத்து பிரிவையும் சேர்ந்த ஆண், பெண் இரு பாலாருக்குமான காத்தா, டீம் காத்தா, குமிதே ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

# விமானத்தை தவறவிட்டதால் ஹெட்மியருக்கு இடமில்லை



அவுஸ்திரேலியாவுக்கான விமானத்தை தவறவிட்டதால் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து துடுப்பாட்ட வீரர் ஷிம்ரோன் ஹெட்மியர் நீக்கப்பட்டுள்ளார்.

ஹெட்மியருக்கான விமானத்தை குடும்ப காரணத்தால் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமைக்கு மாற்றியபோதும் அந்த விமானத்தை பிடிக்கவும் அவரால் முடியாமல் போயுள்ளது. இதனால் 25 வயது ஹெட்மியருக்கு பதில் ஷமர் புருக்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

“இந்த மிக முக்கியமான உலக போட்டிக்கான தயார்படுத்தலுக்கு அணியின் திறனில் சமரசம் செய்ய நாம் தயாரில்லை” என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# தேசிய விளையாட்டு விழா; மரதன் போட்டி கம்பஹாவில்




கம்பஹா ஸ்ரீபோதி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ள 47ஆவது தேசிய விளையாட்டு விழா மரதன், நடை மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகளில் 800 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்த போட்டிகள் சனிக்கிழமை அதிகாலை 5.30க்கு ஆரம்பமாகவுள்ளது. இதற்கு நெஸ்டமோல்ட் வர்த்தகப் பெயரின் கீழ் நெஸ்லே லங்கா அனுசரணை வழங்குகிறது.

47 ஆவது விளையாட்டு விழாவை 31 விளையாட்டுகளைக் கொண்டதாக இம்முறை நடத்துவதற்கு விளையாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

# சம்பியனானது மியண்டாட் விளையாட்டுக் கழக அணி

**கல்முனை மத்திய, அக்கரைப்பற்று வடக்கு, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**



சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக்கழகத்தின் மர்ஹூம் எப்.எம். றஜாத் ஞாபகார்த்த கிரிக்கெட் வெற்றிக் கிண்ண போட்டியில் சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தினர் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டனர்.

அட்டாளைச்சேனை அஷ்ரஃப் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) அட்டாளைச்சேனை பிரண்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் இடம்பெற்ற போட்டியில் சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக மியண்டாட் விளையாட்டுக் கழகத்தின் யூ.எல்.எம். ஆசிக் தெரிவானார்.

சாய்ந்தமருது மியன்டாட் கழகத்தின் செயலாளர் யூ.கே. ஜவாஹிர் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில், கழகத்தின் தவிசாளர் ஜே.எம். காலித், உப தலைவர் யூ.எல்.எம். பாஹிம், ஆலோசனை சபைத் தலைவர் எஸ்.எம். அமீர், தெரிவுக் குழு தலைவர் எம்.ஏ. ஜனுஸைர் உட்பட் பலரும் கலந்து கொண்டனர்.

## சர்வதேச செய்திகள்

# ஜப்பானுக்கு மேலால் வட கொரியா ஏவுகணை வீச்சு: பதற்றம் அதிகரிப்பு



ஜப்பானுக்கு மேலால் வட கொரியா நேற்று (04) இடைநிலைத் தூர ஏவுகணை ஒன்றை வீசியுள்ளது. இது ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் அவதானத்தை அதிகரித்துள்ளது.

சுமார் 4,500 கிலோமீற்றர் பறந்த இந்த பலிஸ்டிக் ஏவுகணை பசுபிக் கடலில் விழுந்துள்ளது. இது அமெரிக்காவின் குவாம் தீவை தாக்க போதுமான தூரமாகும்.

2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜப்பானுக்கு மேலால் வட கொரியா ஏவுகணை வீசி இருப்பது இது முதல் முறையாகும். இதனால் ஜப்பான் தனது நாட்டு மக்களுக்கு அரிதான எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.


வட கொரியா பலிஸ்டிக் ஏவுகணை மற்றும் அணு ஆயுதம் சோதிப்பதை ஐ.நா. தடை செய்துள்ளது. மற்றொரு நாட்டின் மேலால் முன்னெச்சரிக்கை அல்லது அறிவுறுத்தல் இன்றி ஏவுகணையை பறக்கவிடுவதும் சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரானதாகும். ஹொகைடோ தீவு உட்பட வடக்கு ஜப்பானில் உள்ள மக்கள் சைரன் ஒலியுடனேயே நேற்றுக் காலை விழித்துக் கொண்டதோடு, “வட கொரியா ஏவுகணை வீசியுள்ளது. தயவுசெய்து கட்டடங்கள் அல்லது நிலவறைக்குள் இருந்து வெளியேறுங்கள்” என்ற எச்சரிக்கை குறுஞ்செய்தியும் வெளியிடப்பட்டது.

ஏவுகணை பறந்த நேரத்தில் ஜப்பானில் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

வட கொரிய ஏவுகணை ஒன்று பயணித்த நீண்ட தூரத்தை இந்த ஏவுகணை பதிவு செய்ததோடு, சுமார் 1000 கிலோமீற்றர் உயரம் வரை தாவியது. இது சர்வதேச விண்வெளி நிலையம் இருப்பதை விடவும் உயரமாகும்.

வட கொரியா ஒரே வாரத்தில் ஐந்தாவது முறையாக ஏவுகணை சோதனை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# ஈக்வடோர் சிறை மோதல்: 15 கைதிகள் உயிரிழப்பு



ஈக்வடோரின் மிகப்பெரிய சிறைகளில் ஒன்றான லடகுன்காவில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் குறைந்தது 15 கைதிகள் உயிரிழந்துள்ளனர். கைதிகள் துப்பாக்கி மற்றும் கத்திகளால் சண்டையிட்டதாகவும் தொடர்ந்து சிறை காவலர்கள் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் தேசிய கைதிகள் நிறுவனம் குறிப்பிட்டது.

ஈக்வடோர் சிறையில் போதைக்கடத்தல் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. 2020 தொடக்கம் இவ்வாறான மோதல்களில் 400க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக ஈ.எப்.ஈ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# 7ஆம் நூற்றாண்டின் தங்க நாணயங்கள் கண்டுபிடிப்பு



தேசிய சரணாலயம் ஒன்றில் உள்ள சுவர் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7ஆம் நூற்றாண்டின் 44 தங்க நாணயங்களை இஸ்ரேலிய தொல்பொருள்ஆராய்ச்சியாளர்கள்கண்டுபிடித்துள்ளனர்.

170 கிராம் எடை கொண்ட இந்த நாணயங்கள் ஹேர்மன் நீரோடைப் பகுதியில் இருக்கும் மறைவிடம் ஒன்றில் இருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி 635இல் முஸ்லிம் படையெடுப்பின்போது ஒரு மறைவுத் தளமாக பயன்படுத்தப்பட்ட இடம் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நாணயங்கள் பிராந்தியத்தில் பைசாந்திய ஆட்சியின் முடிவுக் காலத்தைச் சேர்ந்தது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். “போர் அச்சுறுத்தலில் ஒருநாள் மீட்டுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் தனது செல்வத்தை உரிமையாளர் மறைத்து வைத்திருக்கக் கூடும் என்று எமக்குத் தோன்றுகிறது” என்று இந்த அகழ்வாராய்ச்சியின் பணிப்பாளர் யோவ் லெரோர் குறிப்பிட்டார்.

# மூவருக்கு பௌதீகவியலுக்கான நோபல்



அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு 2022ஆம் ஆண்டுக்கான பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்வீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் பௌதீகவியலுக்கான நோபல் பரிசை தேர்வு குழு நேற்று (04) அறிவித்தது. அதன் படி, பிரான்சின் அலியான் அஸ்பெக்ட், அமெரிக்காவின் ஜோன் கிளாசர், அவுஸ்திரியாவின் ஷிலிங்கருக்கு பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிக்கலான ஃபோட்டான் சோதனை, பெல் ஏற்றத்தாழ்வுகளை மீறுதல், குவாண்டம் தகவல் விஞ்ஞானம் ஆகிய ஆய்வுக்காக இந்த பரிசு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக, 2022 ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டது. அதில், அழிந்துபோன ஹோமினின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாமம் பற்றிய கண்டுபிடிப்புகளுக்காக சுவீடனை சேர்ந்த ஸ்வாண்டே பாபோவிற்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இன்று (05) இரசாயனவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 5ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.